693

உ

வண்ணை - கோம்பையன் மணல்

# மயான பரிபாலன சபை

# பொன்விழா மலர்

352.72
வண்ணை

1987

# தொண்டு

“ஆருயிர்க் கெல்லாம் அன்புடன் தொண்டு புரியும்
ஆர்வத்தை அண்ணலே, எனக்கு நீ நல்குவாயாக.

சேவை செய்பவன் மனத்தை விட்டு வேற்றுமை விலகிவிடுகிறது. மன்னுயிரைத் தன்னுயிர்போல் அவன் கருதுகிறான். வேற்றாக இருந்தவன் சேவையின்மூலம் தனக்கு உற்றவன் ஆய்விடுகிறான். அங்ஙனம் ஒற்றுமை நிலை நாட்டப்படுகிறது. ஐக்கிய உணர்ச்சி வளர்கிறது. அதினின்று நல்லறிவு ஓங்குகிறது. தொண்டு என்னும் பெரு வாய்ப்பு எல்லார்க்கும் சொந்தமானது. அதைப் பயன்படுத்தாதவன் வாழ்ந்தும் வாழாதவனாகிறான். மனமே! சேவைதான் உன்னை மேலோன் ஆக்குகிறது.

உண்டு உடுத்துப் பூண்டு இங்கு
உலகத்தார் போல் திரியும்
தொண்டர் விளையாட்டே
சுகங்காண் பராபரமே

— தாயுமானவர்.

‘மில்க் வைற்’ ஆதரவு நாட்டின் நற்பணிக்கே.

அன்பளிப்பு
ஏ.வியின் இரத்தினம்
கிராமிய நூலகத்திற்கு

உ
சிவமயம்



JAFFNA
693

வண்ணை - கோம்பையன் மணல்

## மயான பரிபாலன சபை

# பொன்விழா மலர்

1987

352.72

# நிருவாக சபை உத்தியோகத்தர்கள்




முகாந்திரம் **E. P.** இராசையா J. P.
கௌரவ தலைவர்



**R. C.** மன்மராஜன் J. P.
கௌரவ செயலாளர்



திரு. து. சினிவாசகம்
கௌரவ உப-தலைவர்



காலஞ்சென்ற Dr. E. P. கனகசபை J. P. அவர்களின்
ஞாபகார்த்தமாக
சபைத் தலைவரும், சகோதரருமாகிய
முகாந்திரம் E. P. இராசையா J. P. அவர்களால்
கட்டப்பட்ட மடம்.

உ

சிவமயம்

# முன்னுரை

யாழ். நகரின் உள்ளும் புறமும் பல இடங்களில் மயானங்கள் பல காணப்படினும் மக்கள் மனங் கவரும் வண்ணம் இயற்கைக் காட்சியளிப்பது கோம்பையன் மணல் மயானம் ஒன்றேதான். நிழல் தரு மரங்களும் நிரந்தர அமைதியும் இதன் தனிச் சிறப்பாகும். ஆழ்நிலைத் தியானத்திற்கு இவ்விடம் மிகவும் உகந்தது என்று பலரும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்தகையதொரு சிறந்த மயானம் தகுந்த பராமரிப்புக் குள்ளாக்கப்படாவிடின் சீர்கெட்டுப் போகும் எனச் சிந்தித்துத் தெளிந்த மக்களால் நிறுவப்பட்ட மயான நிர்வாகக் குழு இன்று முகாந்திரம் இ. பொன் இராசையா அவர்கள் தலைமையில் திறம்படச் செயலாற்றி வருகின்றது.

சுற்று மதில் கட்டல், மின்சார தகன முறை போன்ற பல முன்னேற்றத் திட்டங்களை மக்கள் முன் வைத்து அவற்றைச் செவ்வனே நிறைவேற்ற நிர்வாகக் குழு இன்று தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

எனவே

மக்களின், ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறும் பட்சத்தில் மயானச் சிறப்பும் ஓங்கி வளரும் என்பது மறுக்க முடியாத உண்மை.

5 – 3 – 85

து. சீனிவாசகம்
உபதலைவர்
மயான பரிபாலன சபை

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத் தலைவரும் சமாதான நீதிபதியுமாகிய

திரு. சி இராசேந்திரன் அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

100 ஆவது ஆண்டை அணுகும் யாழ் சைவ பரிபாலன சபையின் தலைவர் என்ற வகையில் 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த வண்ணை கோம்பையன் மணல் மயான பரிபாலன சபைக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகவும் சந்தோஷமடைகின்றேன்.

சத்தத்தோடு தோன்றிய எத்தனையோ சங்கங்கள் நாமமே இல்லாது நலிவடைந்து நிற்கும் இக்கால கட்டத்தில் 50 ஆண்டு கடந்து நின்று சங்கநாதமிடும் கோம்பையன் மணல் மயான பரிபாலனசபையின் வளர்ச்சி ஒரு மகத்தான சாதனை என்றால் அது மிகையுமல்ல; பிழையுமல்ல.

50 ஆண்டுகளாக இச்சபையின் தலைவராகக் கடமையாற்றிய முகாந்திரம் E. P. இராசையா அவர்களின் சீரிய தொண்டு இச்சபையின் பாரிய வளர்ச்சிக்கு பெரும் துணையாற்றியுள்ளது என்பது எவராலும் மறுக்கமுடியாததொன்றாகும். அவருக்கு உறுதுணையாகச் செயலாற்றிச் செயலாளர் பதவியேற்றுநிற்கும் திரு. R.C. மன்மதராஜன் செயற்பாடும் மகத்தானது.

இறைவனடி சேர்ந்தோரை இந்து சமய முறைப்படி தகனஞ் செய்ய இங்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

தொலை தூரங்களில் இருந்து நடந்து களைத்து வரும் மக்களுக்குத்தங்கி இளைப்பாற, தலைவர் முகாந்திரம் இராசையா அவர்கள் தமது காலஞ்சென்ற தமையனார் Dr. E P. கனகசபை J. P. அவர்களின் ஞாபகார்த்தமாக ஓர் மடம் கட்டியுள்ளார்.

வசூலிக்கும் பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து ஏறத்தாழ 15000/-ரூபாவை மக்கள் வங்கியில் வைப்பிலிட்டமை போற்றத்தகு விடயமாகும்.

இத்தகைய தொரு மயானத்தைக் கட்டிக்காப்பது ஒவ்வொருவரின் கடமையாகும். மக்களின் ஆக்க ஊக்கங்களிலே மயானத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

வாழ்க சபையின் புகழ்
வளர்க அதன் நாமம்

உ

**சிவமயம்**

சிவநெறிப் புரவலர், மில்க்வைற் தொழிலதிபர்,
சமாதான நீதிபதி

**திரு. க. கனகராசா J. P**

அவர்கள் வழங்கிய

# ஆசிச் செய்தி

வண்ணை கோம்பையன் மணல் மயான பரிபாலன சபையார் தங்கள் பொன்விழாப் பொலிவில் தாம் ஐம்பதாண்டுகள் செய்த சேவைநலத்தைப்பாராட்டி அவர்கள் இன்னும் எதிர்காலத்திலும் பழுதிலாத் திறத்தில் பணி புரிவதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிதல் வேண்டுமென வாழ்த்தி எங்கள் ஆசியைக் கூறி மகிழ்கின்றோம்.

# MESSAGE

From

## *Govt. Agent, Jaffna.*

*It gives me great pleasure to send you this Message for publication in the Golden Jubilee Number of the Vannai Kombayanmanal Mayana paripalana Sabhai, Jaffna.*

*It is gratifying to note unlike many Organisations that sprout up with pomp and show and after a few months remain dormant, your Mayana Paripalana Sabhai has withstood the storm and stress of changing times and rendered service, unostentatiously, to the people of Jaffna.*

*The Crematorium – the final resting place of our dear departed souls – has been well maintained and kept clean and tidy. Two Madamas and several shade – trees not only adorn the six acres of land but also afford shade and shelter to the weary mourners, their relatives and friends, who trudge long distances in the funeral procession. I have often heard it told that this Kombayanmanal Mayanam is the best in the North.*

*All facilities for cremation of the Dead and the performance of connected ceremonies are provided here by the Sabhai. I congratulate Muhandiram E. P. Rasiah for officiating as President for the past 50 years and guiding the destinies of this Sabhai and building up a sound Bank balance. He has been ably assisted in these by Mr. R. C. Manmatharayan J. P. the Hon. Secretary of the Sabhai. These two and the Ex. Co members deserve the thanks of the Public.*

*The Sabhai has an ambitious programme,*

1. *to enclose the entire land by parapet walls,*
2. *to instal an Incinerator.*
3. *to secure pipe-borne water etc.*

*I hope the Jaffna Municipality and the philanthropic members of the Public will come forward to help you to achieve these ameneties for the Crematorium.*

*I wish the Sabhai will continue its useful work with greater vim and vigour in the future too.*

**V. M. Punchalingam.**
District Secretary & Govt. Agent,
Jaffna District.

# MESSAGE

*From*

## *The Commissioner, Jaffna Municipality*

*I have pleasure in sending this message for publication in the Golden Jubilee Number of the Kombayanmanal Mayana Paripalanu Sabhai, Vannarponnai, Jaffna.*

*These days when residential buildings are being blasted, massive structures are being reduced to rubble and storeyed buildings are being toppled – indicating the impermanence of man – made structures – the Jaffna man can be sure of a last RESTING PLACE, maintained spic and span by the Mayana Paripalana Sabhai at Kombayanmanal Vannarpannai, in the heart of Jaffna Municipality.*

*I congratulate Muhandiram E. P. Rasiah, the President and the members of this Sabhai for their untiring labours for the last 50 years in providing facilities for the cremation of the dead.*

*The two madams and the shade trees provide rest and shelter to the weary mourners who trudge long distances along the asphalt road under a merciless tropical sun.*

*The decaying dead bodies are turned into preservable ashes here within a few hours.*

*In appreciation of these useful services, the Municipality has given free electric lights to this crematorium The question of providing other amenities-Incinerator and pipe-borne water supply-will receive consideration when conditions return to normality in Jaffna*

*Jaffna looks up to this Sabhai to continue its welcome services with unabated vigour and enthusiasm.*

**C. V. K. SIVAGNANAM,**
*Municipal Commissioner,*
*Jaffna.*

# REMARKS BY V. I. PP.

01-05-65 Your "Kombayanmanal" Cremation Grounds is the best in the North. As President of the Mayana Paripalana Sabhai you are rendering excellent Service......

*— Gate Mudaliyar C. Thiagarajah*

11-07-70 "The Kombayanmanal Crematorium is well maintained...... is kept neat and clean. Your Sabhai seems to give all facilities for the cremation of the dead.

The public must be ever grateful to you for the multifarious services you are rendering.........

*—M. Sri Kantha*

02-06-75 I had occasion to join a funeral procession to the Kombayanmanal Crematorium. The sun overhead and the boiling tar underneath scorched us.

When we entered Mayanam Shade and Shelter of the Madam you had constructed in memory of your relatives gave us rest and we felt refreshed. The soft breeze waited away our fatigue. It was so cool and nice that it was with some reluctance that I left the place.

Thanks to your management . . , .

*— S. Sivasubramaniam, Attorney-at Law, Hultsdorf.*

08-07-78 The Kombayanmanal Cremation grounds should not be treated as a mere crematorium. It should be used for meditation. It is a quite. serene, ideal spot for meditatian . . . .

*— S. U. Somasegaram, Retd. E. O.*

## பாராட்டுரை

வண்ணை - கோம்பையன் மணல் இந்து மயான பரிபாலன சபையின் 50 - ஆவது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் இத் தருணத்தில் அவர்களின் அயராத சேவையைப் பாராட்டுவதுடன் மேலும் இப் பணியில் தொடர்ந்து சேவை செய்ய சபையினர் அனைவருக்கும் எம்பெருமான் நல்லருள் புரிய வேண்டும்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

இ. தவகோபால்
நிர்வாகப் பணிப்பாளர்,
மாவட்ட உதவி ஆணையாளர்.

யாழ் - மாவட்ட
இந்து இளைஞர் பேரவை.
நல்லூர்.

தொலைபேசி : 24277

இலங்கையிலும் - இந்தியாவிலும் சிறந்த
வீடியோ கலர்ப் புகைப் படப் பிடிப்பாளர்கள்

# வீடியோ புளொசம்ஸ்

உங்களது திருமணம், மற்றும் ஏனைய வைபவங்களையும் அதிசிறந்த முறையில் வீடியோ எடுத்து மகிழ்வதற்கும், கலர்ப் படங்களை எடுப்பதற்கும், மற்றும் சிறந்த வீடியோ கசெற்றுக்களை வாடகைக்கும், விலைக்கும் பெற்றுக்கொள்வதற்கும் கலர்ப் புகைப் படங்களைக் கழுவுவதற்கும் நாட வேண்டிய - தொடர்பு கொள்ளவேண்டிய

சிறந்த இடம்:

'வீடியோ புளொசம்ஸ்'
30, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

&

த 'வீடியோ புளொசம்ஸ்'
338, இராமநாதன் வீதி,
வளாகச்சந்தி, யாழ்ப்பாணம்.

---

யாழ்ப்பாணத்தில் சிறந்த படப்பிடிப்பாளர்கள் என
எல்லோராலும் பல்லாண்டுகளாகப் போற்றப்படுபவர்கள்

# "பாரத் ஸ்ரூடியோ"

இன்றே விஜயஞ் செய்யுங்கள்.

"பாரத் ஸ்ரூடியோ"
இல. 82/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் திருப்தியே
எங்கள் மகிழ்ச்சி

யாழ் நகரில் சுத்தம் சுவைமிகு சைவ உணவு வகைகளுக்கும் தித்திக்கும் தீஞ் சுவைமிகு சிற்றுண்டி வகைகளுக்கும், மங்கள விருந்து வைபவங்களுக்குத் தேவையான சிற்றுண்டி வகைகளுக்கும் ஓடர் கொடுத்து குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ள

சிறந்த ஸ்தாபனம்

**ஸ்ரீ கிருஷ்ண பவான்**

கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 24142.

அச்சேற்று வேலைகள்
செய்விப்பவர்கள்

அன்றும் - இன்றும் - என்றும்
நாடுவது -

சைவப்பிரகாச அச்சகம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22356

அன்பளிப்பு

**தொண்டர் தொழிலகம்**

14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

● தமிழ், ● இந்தி, ● ஆங்கிலம்
பாடல்கள் ஒலிப்பதிவு செய்யவும்
★
வீடியோ கசெற்றுகள்
வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும்
சிறந்த இடம்.
★
அம்பாள்
வீடியோ சென்ரர்
இல. 894 கே. கே. எஸ். வீதி
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
VIDEO & OUDIO
CENTRE

மினி றேட் சென்ரர்.
★
'டி. வி. டெக்'
பிரபல விற்பனையாளர்களும்
சகல விதமான I. C ரான்சிஸ்டர்,
வீடியோ, டிவி உதிரிப் பாகங்களின்
மொத்த விற்பனையாளர்களும்.
மினி றேட்சென்ரர்
3, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

லக்கிறேட் சென்ரர்
507 (939) கே. கே. எஸ் வீதி
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

எங்களிடம் உங்களுக்குத் தேவையான பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள், மற்றும் கேக், ஐஸ்கிறீம், தயாரிப்புப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், மற்றும் பண்ணை உற்பத்தி பால், தயிர், மோர், நெய் மற்றும் பொருட்கள் மாஜரின், பட்டர் முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

● உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி ●
● எமது பண்ணையில் இருந்து வீடுகளுக்கு நேரடியாக சுத்தமான பால் விநியோகிக்கப்படும்.

விபரங்களுக்கு:-
லக்கி றேட் சென்ரருடன்
தொடர்பு கொள்ளவும்.

# அபரக் கிரியையின்போது ஓதத்தக்க திருமுறைகள்

தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

(—திருஞானசம்பந்தர் ,திருப்பிரமபுரம், 1:)

நீநாளும் நன்னெஞ்சே! நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே.

(சம்பந்தர், திருச்சாய்க்காடு – 8)

தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார்
எந்தநாள் கொண்டு போவார் வாழ்வதற்கே மனம் வைத்தியா லேழை நெஞ்சே
அந்தணை ரூர்தொழு துய்யலா மையல் கொண்டஞ்சல் நெஞ்சே

(சம்பந்தர், திருவாரூர் – 8)

வாழ்ந்த நாளும் இனிவாழுநாளும் இவையறி கிலேல்
வீழ்ந்த நாளெம் பெருமானையேத்தா விதியில் லிர்காள்
போழ்ந்த திங்கட் புரிசடையினான் றன்புக லூரையே
சூழ்ந்த வுள்ளம் முடையீர்க ளுங்கள் துயர்தீருமே

(சம்பந்தர், திருப்புகலூர் – 8)

துறக்கப் படாத வுடலைத் துறந்துவெந் தூதுவரோ (டு)
இறப்பன் இறந்தால் இருவிசும்ப (ப) ஏறுவன்: ஏறிவந்து
பிறப்பன்: பிறந்தால் பிறையணி வார்சடைப் பிஞ்ஞகன்பேர்
மறப்பன் கொலோ? என் (று) என்னுள்ளங் கிடந்து மறுகிடுமே.

(திருநாவுக்கரசர், தனித்திருவிருத்தம், பொது -- 8)

தன்னைச் சரண்என்று தாளடைந்தேன்! தன் அடியடையப்
புன்னைப் பொழிற்புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத் (து) என்வினை கட்டறுத் (து) ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கலொட் டான்சிவ லோகத் (து) இருத்திடுமே

(திருநாவுக்கரசர், திருவிருத்தம், திருப்புகலூர் - 1)

சுவந்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னைக்
கழலடைந்தான் மேற்கறுத்த காலன் வீழச்
சிவந்தானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே.

(திருநாவுக்கரசர், திருத்தாண்டகம், திருவிழிமிழலை - 2)

ஐயினால் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே யகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தி லிடுவதன்முன் மதியஞ் சூடும்
ஐயனார்க் காளாகி யன்பு மிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி யடிகள் பாதம்
கையினாற் றொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே.

(திருநாவுக்கரசர், திருத்தாண்டகம், திருக்கன்றாப்பூர் - 7)

தந்தையார் தாயா ருடன்பி றந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தா மாரே
வந்தவா (று) எங்ஙனே போமா றேதோ
மாயமாம் இதற்கேதும் மகிழ வேண்டா
சிந்தையீர் உமக் (கு) ஒன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவும் திளைக்குஞ் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்க லாமே.

(திருநாவுக்கரசர், பலவகைத் திருத்தாண்டகம், பொது -10)

எத்தாய ரெத்தந்தை யெச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடா மேவர் நல்லார்
செத்தால்வந் துதவுவா ரொருவ ரில்லை
சிறுவிறகாற் றீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா வென்றன்
அத்தாவுன் பொற்பாத மடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியே னென்செய் கேனே.

(திருநாவுக்கரசர், திருத்தாண்டகம், திருவானைக்கா -1)

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெ னீரே.

(சுந்தரமூர்த்திநாயனார், திருக்கேதாரம் – 1)

கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயிலுல கனைத்துங் கற்பொடிகாண் சாழலோ

—மாணிக்கவாசகர்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்முன் னிங்கு
நசிந்திடல் வேண்டு மன்னாய்

மகாகவி பாரதியார்

எளிய வாழ்வு உயர்ந்த நினைப்பு
பரந்த உள்ளம் ஆழ்ந்த அன்பு
ஆகிய இந்நான்குமே ஒருவனுக்கு
இம் மண்ணுலகத்திலேயே
விண்ணுலக வாழ்க்கை யளிக்கும்.

சுகத்தைக் கண்டு மகிழாதே! ஏன் ?
அது துக்கத்தின் ஓர்வித அலங்காரம்
உனதின்பம்
பிறரைத் துன்புறுத்தக் கூடாது.

# POETIC GEMS

Tell me not in mournful numbers
Life is but an empty dream
For the soul is dead that slumbers
And things are not what they seem

*—Longfellow*

The boast of heraldry, the pomp of Pow'r
And all that Beauty, all that Wealth e'er gave
Awaits alike th' inevitable hour
The paths of Glory lead but to the Grave

Can storied Urn or animated Bust
Back to its Mansion call the fleeing Breath?
Can Honour's voice provoke the silent Dust
Or Flatt'ry soothe the dull cold Ear of Death?

Perhaps in this neglected Spot is laid
Some Heart once pregnant with celestial Fire
Hands that the rod of Empire might have sway'd
Or Wak'd to Extacy the living Lyre

Full many a Gem of purest ray serene
The dark unfathom'd caves of Ocean bear
Full many a flower is born to blush unseen
And waste its sweetness in the desert Air

Some Village - Hampden that with dauntless Breast
The little tyrant of the fields withstood
Some mute inglorious Milton
Some Cromwell guiltness of his Country's blood

Th' Applause of listening Senates to command
The threats of Pain and Ruin to despise.
To scatter Plenty o'er a smiling land
And read their Hist'ry in a Nation's eyes

On some fond breast the parting Soul relies,
Some pious Drops the closing Eye requires
Ev'n from the Tomb the Voice of nature cries
Ev'n in our Ashes live their wonted Fires

*— Gray*

The life's of great men all remind us
That we can make our lives sublime
And departing leave behind us
Foot - prints on the sands of Time

*— Tennyson*

# கோம்பையன் மணல் மயானம்

விசாலமான பூமியிலே வாழும் மனவிசாலமற்ற மனித வர்க்கங்கள் ஒன்றுடன் ஒன்று கலவாது தமக்குள்ளேயே எல்லைக் கோடிட்டு வாழ்கின்றன.

முதலாளியும் தொழிலாளியும் ஒரு தட்டில் உணவுண்டால் அது சாதனை.

உயர்சாதியும் தாழ்சாதியும் இணைந்து நின்றால் அது சரித்திரம்.

என்று அடிக்கோடிட்டு கூறும் மனித அறிவுகள் இத்தகைய ஆக்கங்களுக்கு தங்கள் ஊக்கங்களை அளிக்கதும் இல்லை. அவ்வாறு அளிக்க முற்பட்ட அறிவுகளும் முழுமையான தோல்விகளையே தழுவியுள்ளன.

இவ்வாறு வாழ்நாள் முழுவதும் பிரிந்தும் பிளவுபட்டும் வாழும் மனிதவர்க்கங்கள் ஒன்றுபடும் இடம் என்றால் அது மயானம் ஒன்றுதான்.

மனித ஜாதி என்பது ஓர் இனம், பேதங்கள் இல்லை என்பதைக் தெட்டத் தெளிவாக வெட்ட வெளிச்சமாக அந்த மயான மணல்களுடன் கலந்து கிடக்கும் மனிதச் சாம்பல்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. ஏற்றத்தாழ்வுகளையோ அன்றி சாதி பேதங்களையோ இவற்றில் இருந்து எம்மால் அறிந்து கொள்ளமுடிவதில்லை.

சமத்துவமும் சமதர்மமும் பூத்துக்கிடக்கும் இத்தகைய பெருமைமிகு பூமிகளில் உலாவி, அங்குள்ள சாம்பலைப்பூசி, எலும்புகளைத் தன் மார்பில் கோத்து தலையோட்டைத் தன் கையில் ஏந்திச் சிவனார் ஆனந்தத் தாண்டவமாடுவதாக ஞானசம்பந்தர் பல இடங்களில் தம் தேவாரங்களில் குறிப்பிடுகின்றார்.

இவ்விடத்தைக் காணும் போது மனிதன் மனதில் தன் வாழ்வு நிலையற்றது என்ற உண்மை வலுப்படுகின்றது. உலகபந்தத்தை அறுத்தெறியும் நிலைக்கு அவன் மனம் உந்தப்படுகின்றது.

எனவே மயானம் என்பது வெற்றுடம்புகளைச் சுட்டெரிக்கும் ஒரு சாதாரண மண்திடல் அல்ல. சமத்துவம், சமதர்மம் என்னும் ஒளி அலைகளால் எம்மை நேர் வழிப்படுத்தத் துடிக்கும் கலங்கரைவிளக்கமாம்.

இத்தகையதொரு கலங்கரை விளக்கமே கோம்பையன் மணல் மயானமாகும்.

ஒண் தமிழிற்கு ஒளியேற்றி உலகெங்குப் அதன் சுடர் தெரிய நெய்யூற்றி நின்ற செம்மலாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நீறாகிப் போனதும் இம்மயானத்திற்றான்.

## 2. பெயர்

வண்ணார்பண்ணை ஸ்ரீமான் உடையநாதச் செட்டியாரின் தயாள குணத்தால் மானியமாய்ப் பெறப்பட்டதே 6 ஏக்கர் விஸ்தீரணமுள்ள இந்த மயான வெளியாகும். இங்கு அவர் தொண்டன் ''கோம்பையன்'' என்பவர் தகனமாக்கப்பட்டதைத் தொடர்ந்து இம் மயானம் கோம்பையன் மணல் மயானம் எனப்பெயர் பெறலாயிற்று.

### 3. சபை அங்குரார்ப்பணம்

இம் மயானத்தைப் பரிபாலிப்பதன் பொருட்டு 1932 ஆம் ஆண்டு, பங்குனி மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரியில் ஓர் பகிரங்கக் கூட்டம் கூட்டப்பட்டது.

பிரசித்த நொத்தாரிசு திருவாளர் க. சிவப்பிரகாசபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற அக் கூட்டத்தில் நிர்வாகசபை பின்வருமாறு தெரிவாகியது!

| | | |
|---|---|---|
| தலைவர்: | க. சிவப்பிரகாசபிள்ளை | |
| உபதலைவர் | அ. தில்லையம்பலம் | ஆ. வைரமுத்து |
| இணைக்காரியதரிசி | பொ. இராசையா | ச. நடராசா |
| இணைக்தனாதிகாரிகள் | பொ. தம்பு | மு. சின்னத்தம்பி |

### 4 சபையின் முக்கிய சேவைகள் :

#### (அ) உறுதி முடித்தல் :

இம் மயானத்திற்கு 1932 ஆம் ஆண்டு, ஆவணி மாதம், 22ஆம் திகதி (22-8-32) பிரசித்த நொத்தாரிசு க. நாகத்கரை முசதாவில் 2346 ஆம் இலக்கம் கொண்ட தர்ம நன்கொடைச் சாதனம் ஒன்றை முடிப்பித்துக்கொண்டார்கள். இச்சாதனத்திற்கு சின்னையாச் செட்டியார் சிவசுப்பிரமணியம் அவர்களும் வைத்திலிங்கச்செட்டியார் செல்லத்துரை அவர்களும் கைச்சாத்திட்டனர். நன்கொடையை க. சிவப்பிரகாசபிள்ளை ( சபைத் தலைவர் ) பொ. இராசையா ( இணைக் காரியதரிசி ) ச. நடராசா ( இணைக் காரியதரிசி ) பொ. தம்பு ( இணைத்தனாதிகாரி ) மு. சின்னத்தம்பி ( இணைத்தனாதிகாரி ) ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

#### (ஆ) மடங்கள் :

மயானத்திற்கு வரும் மக்களின் வசதி கருதிக் கட்டப்பட்டுள்ள இரு மடங்களுள் ஒன்று அறங்காத்து நின்று அமரராகிவிட்ட ஸ்ரீமதி தங்கமுத்தாச்சி அவர்கள் நினைவாகக் கட்டப்பட்டதாகும். இத்தகையதொரு அறப்பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திய வி. தா. சி. வே. தம்பிப்பிள்ளை அவர்களால் கட்டப்பட்ட இம் மடம் ஸ்ரீமான் C. குமாரசுவாமி ( C. C. S நீதவான் ) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதன் திருத்த வேலைகளை அன்று தொட்டு இன்றுவரை இவர்களே முன்னின்று நடாத்தி வருவது "வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

மற்றைய மடம் முகாந்திரம் இ. பொன். இராசையா அவர்களால் அவர் தமையனார் அமரரான Dr. E. P கனகசபை (J. P) அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டது ஆகும்.

## இ) வெள்ளி விழா

1958ஆம் ஆண்டு இ. பொ. இராசையா அவர்கள் தலைமையிலான நிர்வாகசபை வெள்ளிவிழாக் கொண்டாடியது. இதன் பின்னர் தான் இவர் தலைமையில் ஆற்றப் பட்டசீரிய செயற்பாட்டின் விளைவாகப் பல பாரிய திட்டங்கள் முழுமை பெற்று மக் கள் முன் மணம் வீசத்தொடங்கின.

## மின்னொளி

திரு: இராஜா விஸ்வநாதன் அவர்கள் யாழ். நகர பிதாவாக இருந்த காலத்தில் இவ் வட்டார மாநகர சபை அங்கத்தவர் குமாரவேலு அவர்களின் தன்னலம் கருதா அரும் முயற்சியின் பயனைத் தண்ணொளி வீசும் மின்னொளி இம் மயானத்திற்கு இலவச மாகக் கிடைக்கப்பெற்றது.

## கட்டணங்கள்

மேலும் இங்கு தகனக் கிரியைகளுக்காக ஒரு சொற்ப தொகை நிர்வாகத்தினால் அறவிடப்படுகின்றது. இம்முறை இன்று நேற்றுப் பிறந்தது அல்ல. பண்டைக்காலம் முதலே இருந்து வந்ததாக அரிச்சந்திர புராணம் எமக்கு எடுத்துரைக்கின்றது.

## வங்கிக் கணக்கு

திரு. மு. மகாலிங்கம் என்பவர் பரிபாலன சபையின் தனாதிகாரியாக இருந்த போது அவர் மேற்கொண்ட திறமைமிகு செயற்பாட்டின் பிரதிபலிப்பாக யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் ஒரு வைப்புக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. இன்று சுமார் ரூ. 20,000/= அங்கு வைப்புப் பணமாக உள்ளது.

## எதிர் காலத் திட்டங்கள்

குழாய் நீர் வசதியுடன் மின்சார தகன முறையினையும் அறிமுகப் படுத்தும் பாரிய திட்டம் ஒன்றினையும் முன்வைத்து அழகுற நிறைவேற்றித் தரும்படி நிர்வாகம் யாழ். மாநகர சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## காவல்

இத்தகையதொரு பெருமை மிகு பூமியினைக் காவல் காக்கும் பாக்கியத்தை 1967-ஆம் ஆண்டில் இருந்து திரு. சின்னத்தம்பி கிருஷ்ணன் என்பவர் பெற்றுள்ளார்.

மற்றைய மயானங்களைப் போல் அல்லாது சோலைமயமாகக் காட்சியளிப்பது இம் மயானத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இம் மயானத்தின் வளர்ச்சிக்கும் இன்றைய உயர்ச்சிக்கும் உறுதுணையாக நின்று கடந்த 25 வருட காலமாக ஒத்துழைப்பு நல்கி வரும் திருவாளர் R. C. மன்மத ராஜன் J P. (சபைக்காரியதரிசி) அவர்கள் செயற்பாடும் இங்கு குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

மேலும் இப்பாரிய பணிக்கு தம் சீரிய செயற்பாட்டினைக் கொடுத்துதவிச் சிவபதமடைந்துள்ள திரு. பி. நடராசர் (முன்னைநாள் சபை உபதலைவர்) திரு. பொ. தம்பு (முன்னைநாள் சபைத் தனாதிகாரி) வைத்தியர் இராமலிங்கம் போன்றோரையும் நினைவு கூரல் அவசியமாகும்.

மில்க் வைற் தொழிலதிபர் சமாதான நீதிபதி திரு. க. கனகராசா அவர்களும் அவ்வப் போது பல உதவிகளை வழங்கியுள்ளார்.

ஆண்டவனின் ஆசி பெற்ற இடங்கள் திருக்கோயில்கள் என்றால் அவன் திரு நடனம் புரிந்த இடங்களல்லவா மயானங்கள்?

இந்த மயானங்களிலேயே இன மத, மொழி வேறுபாடுகளால் தலைதூக்கியுள்ள மிருக வெறியும் மிலேச்சத்தனமான செயற்பாடுகளும் கூட தகனத்திற்குட்பட்டால் ..........!

நினைத்தாலே இனிக்கிறது அல்லவா?

எது எவ்வாறு இருப்பினும் மக்களின் ஆதரவிலும் அவர்கள் வழங்கும் ஆக்க ஊக்கங்களிலேயுமே இம் மயானத்தின் எதிர்கால எழுச்சியும் வீழ்ச்சியும் தங்கியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

R. C. மன்மதராஜன்
(காரியதரிசி)

## மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் திரயம்பகம் யஜாமகே
சுகந்திம் புஷ்டி வர்தனம்
உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முக்ஷியமாம் ருதாத்.

சுத்த சத்துவகுணம் பொருந்தியவரும், ஆன்ம ஒளியை வளர்ப்பவருமாகிய முக்கண்ணனைத் தியானிப்போமாக.

காம்பிலிருந்து வெள்ளரிப்பழம் தானே விடுபடுவது போல, பிறப்பு இறப்பு என்ற பந்தத்திலிருந்து உமதருளால் விடுபடுவோமாக பேரின்பப் பாதையிலிருந்து விலகாதிருப்போமாக.

# இறப்பிற்கு முன்னும் பின்னும்

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்துக்களைப் பொறுத்தவரை சமயம் என்பது வாழ்க்கையின் ஓர் அம்சம் என்றோ பொழுதுபோக்குச் சாதனம் என்றோ கருதப்படுவதில்லை. அது மனிதனது பூரண வாழ்க்கையிலும் வியாபித்து நிற்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது. வாழ்வின் பல்வேறு அம்சங்களை முரண்பாடின்றி ஒருங்கிணைப்பதும் வாழ்க்கைக்கு வழி காட்டுவதும் அடிப்படைக் கருத்துக்களையும் குறிக்கோளையும் தெளிவு படுத்துவதுமே சமயம் என்ற நம்பிக்கை நிலவி வருகின்றது. மனிதனைப் பொறுத்தவரை உடற்பற்றுக் காரணமாய் பல்வேறு துயரங்களுக்கு உள்ளாகின்றான். இத்துயரங்களிலிருந்து மீள்வதற்கு உடலுணர்வை வெல்வதும் உடலை மீறிய ஆன்மிக உணர்வை வளர்ப்பதும் அவசியமாகின்றன. பரம்பொருளை வழிபடவும் வாழ்க்கையின் சகல அம்சங்களையும் திடமனதுடன் நிறைவேற்றவும் கருவியாயுள்ளது உடம்பு. நாவலர் பெருமான் இதனை வற்புறுத்துமிடத்து, "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என இரண்டாம் பாலபாடத்தில் குறிப்பிடுவது கவனித்தற்குரியது. சமய நெறி நின்று ஒழுகுபவன் உள்ளத்திற் கொண்டிருக்க வேண்டிய இலட்சியத்தினை நாவலர் பெருமானின் கூற்றுத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய இலட்சியத்தினை அடைய மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆற்றக் கூடிய நல்வினைகளே சமயக் கிரியைகள். மனிதன் கருவிலே தோன்றி இறக்கும் வரை நிகழும் கிரியைகள் **பூர்வக் கிரியைகள்** என்றும் இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் **அபரக்கிரியைகள்** என்றும் சுட்டப்படுகின்றன.

மனிதனது பூர்வ வாழ்வில் செய்யப்படும் கிரியைகள் அவனது சமய அனுபவத்திற்கும் ஆன்மிக விடுதலைக்கும் வழி வகுப்பதைப் போன்று அபரக்கிரியைகள் அவனது ஆத்ம சாந்திக்கு இன்றியமையாதவையாகின்றன. ஒருவன் இறந்தபின் அவனது நன்மை கருதி அவனது பிள்ளைகள் முதலியோரால் செய்யப்படும் கிரியைகளே அபரக் கிரியைகள். அபரம் என்றால் "பிந்தியது" என்று பொருள்படும். இவ்வபரக்கிரியைகளைச் செய்வதனால் இறந்தவரது ஆன்மா பாசங்களினின்று நீங்கிச் சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கையாகும். அபரக் கிரியைகளுள் தகனக் கிரியை, அஸ்தி சஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் என்பன குறிப்பிடத்தக்கன. இவை உத்தரக் கிரியை, சிராத்தக் கிரியை என இரு வகையாக நடைபெறும். இவ்விரண்டினுள் உத்தரக் கிரியைகள் இறந்தவுடன் அவ்வச் சந்தர்ப்பத்தில் நடைபெறுவன. சிராத்தக் கிரியை வருடமொருமுறை இறந்த திதியிற் செய்யப்படுவதாகும்.

இந்து மரபின்படி இறந்த ஒருவனுக்குச் செய்யும் அபரக்கிரியைகளில் அவனது மூத்த மைந்தனுக்குப் பெரும் பங்குண்டு. ஏனையோர் அவனோடு இணைந்து கிரியைகளில் ஈடுபடுவர். கர்மக் கோட்பாட்டின் படி ஒருவன் செய்த நல்வினை, தீவினைக்குத் தக்கதாகவே அவனுக்குரிய பிள்ளைகள் வந்து சேர்வர். தனது வாழ்நாளில் தனக்குக் கிடைத்த சரீரத்தினால் நல்வினைகளைச் செய்தவன் அபரக்கிரியைகளின் பலனைப் பெறுவான். அதற்கேற்ப அவனது நல்வினைப் பயன் காரணமாய் அக்கிரியைகளைச் செய்யத்தக்க புதல்வரையும் பெற்ற பாக்கியத்திற்குரியனாவான். அத்தகைய புதல்வர்கள் இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியைகள் அவர்களுக்கு நன்மையளிப்பதற்குரியவையாகின்றன. வடமொழியிலே மைந்தனுக்குரிய பெயர் "புத்திரன்" என்பதாகும். "புத்" என்பது நரகத்திற்குரிய பெயர். "திர" என்றால் "நீக்கத்தக்கவன்" எனப் பொருள் கொள்ளலாம். எனவே "புத்திரன்" என்ற பெயர் "நரகத்திற்குச் செல்லும் வேதனையினின்று நீக்கத்தக்கவன்" என்ற பொருளைக் கொண்டுள்ளமை கவனித்தற்குரியது. இந்த உயர் நோக்கத்தை

அடிப்படையாகக் கொண்டே இந்து சமய மரபில் இறந்தோருக்கென ஆற்றப்பட வேண்டிய கிரியைகள் தவறாது செய்யப்பட வேண்டிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளன. இது பிதிர்க் கடன் என்றும் ''பிதிர் யக்ஞம்'' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

மரணக் கிரியையில் தீமை நீங்கி நன்மையுண்டாவதற்குரிய கிரியைகள் இடம் பெறுவதோடு சரீரசுத்தி, ஆன்ம சுத்தி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டும் கிரியைகள் நிகழ்வன. சரீரத்தைச் சுத்தி செய்வதற்கென அபிடேகமும் கிளாக்கினியாற் சுடுதலும் நிகழும். ஆன்மசுத்திக்காகச் செய்யப்படும் கிரியையே அந்தியேஷ்டி எனக் கூறப்படுகின்றது. ''அந்திய'' என்பது ''இறுதியான'' என்ற பொருளிலும் ''இஷ்டி'' என்பது யாகம் என்ற பொருளிலும் வரும். எனவே இறந்தவர்க்காகச் செய்யும் ''இறுதியாகம்'' என அந்தியேஷ்டியைக் கொள்ளலாம். இதனைச் செய்வதால் சமய அனுஷ்டானங்களில் நேர்ந்த குறைகள் தீரும்.

பிதிரர் உறையுமிடம் 'பித்ருலோகம்' எனச் சமயநூல்கள் சுட்டுகின்றன. ஒருவன் இறந்தவுடனேயே 'பித்ருலோகம்' சென்றடைவதில்லை. பிறிதோர் பிறப்பும் உடனடியாக எடுத்துவிடுவதுமில்லை. இறந்து போனவரது சீவன் ஒருவருடம் பிரயாணத்தின் பின்னர்தான் 'பித்ரு' ஸ்தானத்தை அடைகின்றது என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. இந்நோக்கம் நிறைவேறும் வரை ஒரு வருடகாலத்தில் அந்த ஆன்மாவின் திருப்திக்காக மாதாமாதம் பல சடங்குகள் இடம்பெறுவன. இந்துசமய சாத்திரங்களின்படி ஒரு சீவன் வைதரணி என்ற நதியைக் கடந்துதான் யமலோகம் செல்லவேண்டும் எனக் கூறப்படுவது போல, கிரேக்க சமய வரலாற்றின்படியும் (Mythology) ஒரு குறிப்பிட்ட நதியினைக் கடந்தே மறு உலகம் செல்ல வேண்டுமென்ற நம்பிக்கை நிலவுகின்றது. இந்து, கிரேக்க சமய மரபுகளை ஒப்பீட்டடிப்படையில் ஆராயுமிடத்து இத்தகைய ஒற்றுமையான நம்பிக்கைகளை அவதானிக்க முடிகின்றது. இறப்பிற்குப் பின்னுள்ள நம்பிக்கைகள் பற்றி இந்துசமயத் திருநூல்களில் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன. இவ்வரிசையில் தொன்மையான சமய இலக்கியமாகிய இருக்குவேதம் குறிப்பிடத்தக்கது. இவ்வேதத்தில் உள்ள பத்தாம் மண்டலத்தில் ஏறக்குறைய ஐந்து பாடல்கள் இறப்புப்பற்றியும் இறப்புக்குப் பின் உள்ள வாழ்வு பற்றியும் எடுத்துக் கூறுகின்றன (இ. வே. X : 14 - 18). இறப்புப்பற்றி ஒரு பாடல் தனியாகவே உள்ளது (இ. வே. X : 14). இப்பாடல் இறப்போடு தொடர்புடைய பல நம்பிக்கைகளைக் கூறுகின்றது. இறந்த உடலை அக்கினியின் மூலம் தகனம் செய்யும் முறை சிறப்பாகக் கொள்ளப்பட்டதை அறிய முடிகின்றது. இம்முறையே இறப்பக்குப் பின்னுள்ள நிலைபற்றிய தெய்வீக வரலாற்றுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இறந்த உடலை அக்கினியே பிதிரரும் தேவரும் உறையும் மறு உலகுக்கு எடுக்கச்செல்வதாக இப்பாடல் கூறும். தகனக்கிரியையின்போது இறந்த உடலுக்கு பறவை, மிருகங்கள், எறும்பு அல்லது பாம்பு ஆகிய பிராணிகளால் யாதேனும் ஊறு விளைவிக்கப் பட்டிருப்பின் அதனை நீக்குமுகமாக அக்கினியும் சோமனும் வழிபடப்படுவர். மறு உலகக்குரிய பாதை மிகவும் நீண்டதென்றும் இப்பாதையால் இறந்தோரைச் சவிதா என்ற தெய்வம் அழைத்துச் செல்வதாகவும் பூசன் என்ற தெய்வம் பாதுகாப்பதாகவும் கூறப்படுகின்றது. தனது மூதாதையோராகிய பிதிரர் சென்ற வழியே படிப்படியாகச் சென்று இறந்தவரது ஆன்மா ஒளியுடன் கூடிய உலகுக்குச் செல்வதாகவும் அங்கு யமனுடன் விளங்கும் பிதிரர்களைச் சந்திக்கும் என்றும் இப்பாடல் கூறும்.

இருக்கு வேதத்தின்படி யமனே இறப்பிற்குரிய தெய்வம். யமன்தான் முதன்முதலாக இறந்தோருக்குரிய பாதையை வகுத்தவனாவான். இறப்பின்போது வழங்கப்படும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிப்புறும்படி யமன் கூவியழைக்கப்படுவன். யமனோடு வருணன் என்ற தெய்வமும் அவிர்ப்பாகத்தை ஏற்றுக் களிக்கும்படி அழைக்கப்படுவன்.

தமது முன்னோர் சென்ற பாதையால் முன்னேறிச் செல்லும் படியும் சுவர்க்கத்தில் வாழும் பிதிரரோடும் யமனோடும் சென்று இணையும் படியும் இறந்தவர்களைக் குறித்துக் கூறும் வாசகங்கள் இப்பாடல்களில் உள்ளன. இறந்தவனுக்கு யமன் இளைப்பாறுவதற்குரிய இடத்தினை அளித்துள்ளதால் இறந்தவனுக்கு எவ்வித தீங்கும் இழைக்காது விடும்படி அசுரர்கள் கேட்கப்படுவதும் குறிப்பிடற்குரியது. இறந்தவர் செல்லும் பாதையை யமனின் இருநாய்கள் பாதுகாப்பதாக நம்பப்பட்டது.

இருக்கு வேதத்தில் பிதிரரைக் குறித்துப் பத்தாம் மண்டலத்தில் பாடல்கள் இடம் பெறுகின்றன (இ. வே: X: 15; X: 54.). இவர்கள் மூன்றும் உலகாகிய சுவர்க்கத்தில் வாழ்பவராகக் குறிக்கப்படுகின்றனர். இவர்களுக்குத் தொடக்கத்திற் சென்ற மூதாதையர் என்றும் தொன்மையான பாதையால் சென்றவர்கள் என்றும் பின்னர் இறந்தோருக்கு அவர்கள் தம்முடன் சேரும் வகையில் பாதை வகுத்தவர்கள் என்றும் பெயர் குறிப்பிடப்படுகின்றது. பிதிரர் தமது உணவை அவிர்ப்பாகமாகப் பெறுவர். இந்த அவிர்ப்பாகத்தினால் வழிபடுவோரைப் பாதுகாப்பதாகவும் நம்பப்பட்டது. மனித நிலையில் அவர்களுக்கெதிராகச் செய்த எந்தப் பாவத்திற்காகவும் தமது வழித்தோன்றல்களைத் துன்புறுத்தாதிருக்கும்படி வேண்டப்படுவர். நல்ல வளத்தோடும் பிள்ளைப் பேற்றோடும் நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்காக அவர்களது ஆசியைப்பெறும் வகையில் அவரது மக்களால்பிதிரர்கள் வழிபடப்படுவர். பிதிரர்களுக்குரிய வழிபாட்டில் மங்களகரமான திக்குகள் மாறியும் வலப்புறத்தால் அமையும் விடயங்கள் இடது புறமாகவும் அமையும். பிதிரர்களுக்குரிய திக்கு தெற்கு. எனவே இவர்கள் 'தென்புலத்தார்' என்று குறிக்கப்படுவர். அவர்களுக்குரிய அவிர்ப்பாகக் கிரியை தெற்குப் புறம் நோக்கியே செய்யப்படும் என்பதை இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது.

இருக்கு வேதத்தில் இடம் பெறும் யமன் என்ற தெய்வத்தோடு தொடர்புடைய பாடல்களும் இறந்தோர் பற்றிய குறிப்புக்களைக் கொண்டுள்ளன. ஏறக்குறைய மூன்று பாடல்கள் இருக்கு வேதத்தில் யமனுக்கென உள்ளன. இறந்தோரை ஆட்சிசெய்பவனாக யமன் சித்திரிக்கப்படுவன். எனவே, இவனுக்கு "யமராஜன்" என்ற பெயர் சிறப்பாக அமைகின்றது. யமனுடைய பாதையே மரணம். இவன் பிதிரர்களுக்குத் தலைவன். யமனோடு சேருவதற்கு இறந்தவர் நல்வினைப் பயன்களோடும் வழிபாட்டினால் ஈட்டிய பலன்களோடும் செல்ல வேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது. இந்த நல்வினைப் பயன்களை இஷ்டாபூர்த்தம் என இருக்கு வேதம் குறிப்பிடுகின்றது. ஒருவனது நல்வினைத் தேட்டமே இறப்பின் பின் மறு உலகில் உயர்ந்த பேற்றினை நல்கும் என்ற ஆழ்ந்த நம்பிக்கைக்கு இருக்குவேதத்தில் இறப்புப் பற்றிய பாடலில் இடம்பெறும் இக்குறிப்புச் சிறந்த சான்றாக அமைகின்றது. இறந்தபின் தாம் பெற்ற நல்வினை தீவினைக்கேற்ப பிறிதோர் உடலில் இன்பத்துடனோ அன்றி, துன்பத்துடனோ தொடர்ந்து இருக்கும் நிலை ஆன்மாவின் அழிவற்ற தன்மை பற்றிய நம்பிக்கையையே சுட்டி நிற்கின்றது. உடலைவிட்டு நீங்கிய நிலையிலேயே மனிதன் மறுமையில் விடுதலை அடையக் கூடியதாயினும் இறந்த உடல் ஒருவனது எதிர்கால வாழ்வைப் பொறுத்தமட்டில் முக்கியத்துவம் பெறுவதாக வேதகாலத் தெய்வ இயலிலிருந்து அறிய முடிகின்றது. இறப்பின் பின் உள்ள நிலைபற்றி இருக்கு வேதம் கூறும் சிந்தனைகளின் வளர்ச்சியாகவே கடோபநிடதம் அமைகின்றது. உபநிடதங்களுள் இவ்வுபநிடதம் மிகவும் முக்கியத்துவமுடையது. இவ்வுபநிடதத்தில் இடம் பெறும் நசிகேதனுடைய கதையிலிருந்து இறப்பின் பின் ஆன்மாவின் நிலைபற்றிய கருத்துக்கள் தெளிவு பெறுகின்றன. நசிகேதன் யம உலகுக்குச் சென்று யமனிடம் ஆன்ம விசாரணை செய்கின்றான். யமன் அவனுக்கு இதுபற்றி உபதேசிக்கையில் சுவர்க்கத்திற்கோ மோட்சத்திற்கோ செல்வதற்குப் போதுமான நல்வினைகள் இல்லாதவன் இறப்பின் பிடிக்குள் விழுந்து சம்சாரச் சுழற்சியில் அவதியுறுகின்றான் என்றும் மீண்டும் மீண்டும் உடலோடு மறு

பிறவியடைகின்ருன் என்றும் எவனெருவன் தன்னைக் கட்டுப்படுத்துகின்ருனே அவனே உயர்நிலையை அடைகின்ருன் என்றும் கூறுகின்ருன். உபநிடதங்கள் சத்தியத்தை முறையாக உணர்ந்தவனே மோட்சத்தையும் முடிவில்லா அமைதியையும் மாற்றமில்லா இன்பத்தையும் அடைவான் எனக் கூறுகின்றன.

உடல் உயிரோடு இருக்கும்போதே ஆற்றவேண்டிய நற்கருமங்களைப் பற்றி நாயன்மார்களும் வற்புறுத்தியுள்ளனர். மனித உடலின் நிலையாமையைப் பற்றி சுந்தரர் "தோற்ற முண்டேல் மரண முண்டு" என்று "வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்" என்றும் குறிப்பிடுகின்ருர். இவ்வுடல் உயிருடன் இருக்கும்போதே செய்தற்குரிய நல்வினைகளைச் செய்தல் வேண்டும் என்பதை,

பறியேசுமந் துழல்வீர் பறிநரி
கீறுவ தறியீர்
குறிகூவிய கூற்றங் கொளும் நாளால்
அறம் உளவே

என்ற பாடலால் வற்புறுத்துமிடத்து சுந்தரர் இலட்சியத்தினிடத்துக் கூவிக் கொண்டு வரும் யமன் உயிரைக் கொண்டு போகும் நாளில் அறம் செய்ய முடியுமா? என வினவுகின்ருர். நாட்கள் விரைவாகச் செல்ல யமதூதர்களும் வருவதற்கு முன்னமே விரைந்து சென்று சிவபெருமானுக்கு அடிமைப்பட்டுப் பிழையுங்கள் என அறிவுறுத்துகையில் "... நாளோடிய நமனார் தமர் நுணுகாமுனம் நுணுகி ஆளாயுய்மின்..." எனக் கூறுகின்ருர்.

மீளாத் துயருக்கு நிலைக்களமாகவுள்ள பிறவியை வேண்டேன் என்று கூறுமிடத்து,

மணமென மகிழ்வர் முன்னே மக்கள்
தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை
வேண்டேன் நாயேன்.

எனக் குறிப்பிடுகின்ருர். சுந்தரர் பிறவா நிலைச் சிறப்பினையும் பிறப்புண்டேல் அப்பிறப்பில் உடம்பாற் செய்ய வேண்டிய நல்வினைகளின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கது.

மனிதனது உயிர் பிரிந்தபின் அவ்வுடல் தரிக்கப்படும் இடமே சுடலை. இறந்தோரது உடல் சுடலைக்குக் கொண்டு செல்லப்பட்டவுடன் அங்கு நிகழ்வது சுடலைக் கிரியையாகும். காரைக்காலம்மையார் அருளிச் செய்த பிரபந்தங்களுள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் சுடலையைப் பற்றியும் அதில் இறைவன் நின்றுடும் பாங்கும் சித்திரிக்கப்படுவதிலிருந்து சைவ மரபில் அதற்கும் ஒரு தெய்விக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. காரைக்காலம்மையார் திருக்கயிலையினின்றும் பேய் வடிவுடன் இறைவன் ஆணைப்படி திருவாலங்காட்டினை அடைந்தபோது அங்கு தாம் கண்ட காட்சியின் நிலையை உள்ளவாறே பாடியருளிய இத்திருப்பதிகத்தில்,

புந்தி கலங்கி மதிமயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டிலிட்டுச்
சந்தியில் வைத்துக் கடமைசெய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழவின்ஓசை
திசைகது வச்சிலம் (பு) ஆர்க்கஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும்எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே.

எனக் குறிப்பிடுமிடத்து ஈமக்கிரியைகளுக்கு நிலைக்களமாகவுள்ள சுடலையை நினைவுபடுத்துகின்ருர். காடு, சுடலை, ஈமமிடு சுடுகாடு, புறங்காடு போன்ற பெயர்கள் அம்மையாரின் மூத்த திருப்பதிகத்தில் இடம் பெறுவன.

சுடலைக் காட்சியினையடுத்துத் திருவிரட்டை மணிமாலையில் இறந்தபின் சுடலையைச் சேருமுன் சிவபெருமானின் திறத்தினை ஆழ்ந்த கருத்துடன் இன்புடன் கேட்பாயாக என அறிவுறுத்துமிடத்து,

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால்
உற்ருர்கள்
செத்தமரம் அடுக்கித் தீயாமுன் —
உத்தமனைப்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து

எனக் கூறுவர். அவ்வாறு இறைவன் தாள் சேரும் நிலையிற் கிட்டும் அநுபவத்

தினை அம்மையார் அற்புதத் திருவந்தாதி யில் குறிப்பிடுமிடத்து,

இனியோம்நாம் உய்ந்தோம் இறைவன் அருள் சேர்ந்தோம்
இனியோர் இடர்இல்லோம் நெஞ்சே-இனியோர்
வினைக்கடலை ஆக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண்

என அனுபவித்துக் கூறுவர். இறைவன் தாள் சேர்ந்தவிடத்துப் பிறவிப் பெருங் கடலை நீந்தும் துணைகிடைத்த நிலையையும் எதுவித துன்பமுமின்றி இருக்கும் நிலை யையும் இப்பாடல் உணர்த்துவது கவனித் தற்குரியது. அம்மையாரின் இச் சிந்தனைக் கேற்ற வகையில் திருக்குறளில்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார்

என்றும்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

என்றும் வரும் கருத்துக்கள் ஒப்பு நோக்கற்பாலன. பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு இறைவன் திருவருளை உடல் கூடலையைச் சென்றடையும் முன்னரே வலிந்து பெற்றுய்தல் வேண்டும் என்ற கருத்தினைச் சமய நூல்கள் வற்புறுத்து கின்றன. அவற்றுள் காரைக்காலம்மை யாரின் பிரபந்தங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெறுகின்றன.

பிரஸ்தானத்திரயத்துள் ஒன்றாகிய கீதையும் இறப்புப் பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்துவதில் முக்கியத்துவம் பெறு கின்றது. கீதையின் இரண்டாம் அத்தியா யத்தில் கிருஷ்ண பரமாத்மா உபதேசிக்கும் கருத்துக்களும் இறப்பினையும் அதற்குப் பின் னுள்ள நிலையினையும் தெளிவு படுத்துவன. மரணம் என்பது உயிரைப்பற்றியதல்ல. உடலுக்குத் தான் மரணம் ஏற்படுகின்றது. உயிர் எனப்படும் ஆன்மா அழிவில்லாதது. உடலுக்கு அழிவு திண்ணமாக ஏற்படுகின் றது. இளமை, முதுமை என்ற நிலைகளைப் போல மரணம் என்பதும் ஒருநிலையேயாகும் இதனை எண்ணிப் பார்க்கும் அறிவாளி சாக் காட்டினைக் கண்டு வருந்தமாட்டான். இவ் வாறு இறப்பு, இறவாமை பற்றிப் பகவான் உபதேசிக்குமிடத்து உடலுக்கு ஏற்படும் மர ணம் ஆன்மாவின் முன்னேற்றத்தில் ஒரு நிலையாகும் என்பது தெளிவாகின்றது.

மரண பயத்தை நீக்கும் வகையிலும் கீதையில் உபதேசிக்கப்படுகின்றமை கவனித் தற்குரியது. பயத்தை நீக்குவதே தத்துவ அறிவின் முதல் நோக்கம். 'கர்மயோகத்தினை ஓரளவு கடைப்பிடித்தாலும் சம்சாரச் சுழல் என்னும் பேரச்சத்திலிருந்து உன்னைக் காப் பாற்றி விடும்' என்ற உபதேசமும் குறிப்பிடத் தக்கது. ''பயமற்ற பெருநிலையே மோட்சம்'' என பிருஹதாரண்யக உபநிடதம் கூறும். ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ் சோம் நரகத்திலிடர்ப்படோம்'' என நாவுக் கரசர் கூறுவதும் பயநீக்கம் கருதியேயாகும்.

பிறப்பினின்றும் விடுதலை பெறக் கீதை கூறும் பிறிதோர் வழியும் இங்கு குறிப்பிடற் பாலது. அது கர்ம யோகத்தினைப் பின்பற்றி ஒருவன் கர்மசந்நியாசியாக வாழவேண்டு மென்பதை வற்புறுத்துகின்றது. கருமத்தின் பயனாகவே புண்ணியமும் பாவமும் தொடர் கின்றன. இவற்றின் காரணமாகவே மனி தன் பிறப்பு, இறப்பு என்னும் சம்சார பந்த த்தில் சிக்கி அல்லற்படுகின்றான். இத்துயரிலி ருந்து மீள்வதற்காகவே கருமயோகத்தின் சிறப்பு வற்புறுத்தப்படுகின்றது. சாதாரண கருமத்திற்குப் புண்ணிய பாவமென்னும் தளைகள் உண்டு. பயனில் ஆசை வைக்காமற் செய்யப்படும் கருமத்திற்குத் தளைகள் கிடை யா. பயன் கருதாமலே கருமத்தைச் செய்யும் சாதகனுக்கு எவ்வித தளைகளும் விலகிப் போவதால் சம்சாரத்தில் துன்பமுறும் அவல நிலை ஏற்படுவதில்லை. இறுதியில் அவன் இறைவனடி சேர்வான். கருமப் பல தியாகத் திற்கு ஒருவன் பற்றற்ற உள்ளம் கொண்ட வனாகவும் இருத்தல் அவசியம். இன்பத்தி லும் துன்பத்திலும் மாறாத தன்மையுடைய வனே கருமயோகி எனக் கீதை சுட்டுகின்றது. இவனே ஆசையை அகற்றியவன் எனவும் அது கூறும். இன்ப துன்பங்களை ஒப்ப நோக் குதல் இரு வினை ஒப்பாகும். இந்நிலையைப் பெரியபுராணம்,

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்

எனச்சிறப்பிக்கின்றது.

மனநிலை பண்பாடடைவதற்குக் கரும யோகம் துணைநிற்கின்றது. ''கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே'' என்ற கீதை உபதேசத்தில் உயர்ந்த தத்துவப் பொருள் அடங்கியுள்ளமை உய்த்து உணரற்பால தாகும். இத்தகைய உபதேசங்கள் ஆஸ்திகரின் உள்ளத்தில் எழும் மரணபயத்தினை நீக்குவதற்கு அருமருந்தெனத் துணைபுரிந்து வந்துள்ளமை கவனித்தற்குரியது.

சமய சாஸ்திரங்களில் இறந்தவரது உடலுக்குச் செய்யும் காரியம் பிரேத சம்ஸ்காரம் எனச் சுட்டப்படுகின்றது. சம்ஸ்காரம் என்ற சொல்லும் இங்கு சிந்தனைக்குரியது. சம்ஸ்காரம் என்றால் ''நன்றாக ஆக்குவது'' என்பது பொருளாகும். இறந்தபின் பிரேதத்திற்குச் செய்யும் சேவை மிக உயர்ந்த கைங்கரியமாகக் கூறப்படுகின்றது. இறந்த உடலை அடக்கமோ அன்றித் தகனமோ செய்வது மிகவும் அவசியமான கடமையென வற்புறுத்தப்படுகின்றது; அதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்வதும் இன்றியமையாதது. சீவாத்மாவுக்குப் பதினாறு கலைகள் உண்டென்றும் அவற்றுள் பதினைந்து கலைகள் மட்டுமே உயிராக இருப்பதும் உடம்பும் ஒரு கலை என்றும் எனவே உயிர் போன பின்னும் ஒரு கலை உள்ள அந்த உடலை ஈஸ்வர அர்ப்பணமாக்கவே பிரேத சம்ஸ்காரம் தேவைப்படுகிறது என்ற கருத்தும் இங்கு கவனித்தற்குரியது. இதிலிருந்து உடலின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது. ''காயமே கோயிலாக'' என அப்பரின் வாக்கும் உடலின் பெருமையைக் கூறும். அறம், தர்மம் ஆகிய நல்வினைத் தேட்டத்திற்குச் சாதனமாக அமைவது உடலேயாகும்.

திருமூலரும் திருமந்திரத்தில் யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றார். யோக நெருப்பினால் தவத்தீயினால் ஒளிவிடும் உடம்பு திடீரென்று அழியாது; நம் தெய்வ முயற்சிக்கு நெடிது உதவும் என வற்புறுத்தி, விரத ஞானங்களால் உடம்பொடு கூடிய இவ்வாழ்க்கையை ஒளிபெறச் செய்யுங்கள் என உணர்த்துமிடத்து,

பண்டம் பொய்க் கூரை பழகி விழு
தலால்
உண்டவப் பெண்டிரு மக்களும் பின்
செலார்
கொண்ட விரதமு ஞானமு மல்லது
மண்டி யவருடன் வழிநட வாதே

எனக் கூறுகின்றார்.

நல்வினைத் தேட்டத்திற்கு உடல் காரணமாக அமையும் சிறப்புப் பற்றியே இறந்தபின் உடலுக்குரிய சம்ஸ்காரங்கள் முறையாகச் செய்யப்பட வேண்டுமென்பதை இந்து சமய நூல்கள் வற்புறுத்துகின்றன.

உலகின் ஏனைய தேசங்களில் வாழும் பல்வேறு இனமக்களிடையே இறப்புக்குப் பின் இடம்பெறும் சமயச் சடங்குகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பிரேத சம்ஸ்காரம் பெரும் சமயச் சடங்காகவே அமைந்து விடுகின்றது. ஒருவன் நன்மைகளைத் தன் சரீரத்தால் செய்த காரணத்தினாலேயே உயிர்பிரிந்த பின்னும் அந்தச் சரீரத்திற்கு இறுதி மரியாதை செலுத்தும் மரபு இருந்து வருகின்றது. சைவசித்தாந்தத்தின்படி எமது தீவினைப் பயன்களைப் போக்கிக் கொள்வதற்கு என இறைவன் தநு, கரண, புவன, போகங்களைத் தந்தருளியுள்ளான் என்ற நம்பிக்கையுள்ளது. எனவே ஒரு உடல் இறைவன் தந்த, ஒரு பிரசாதமாகவே அமைகின்றது. இக்காரணம் பற்றியே மானிடப்பிறவி உயர்ந்ததாகச் சிறப்பிக்கப்படுகின்றது. அத்தகைய உடலைக் கரணங்கள் ஓய்ந்த பின்னும் அதற்குரிய மரியாதை வழங்கி இறைவனிடம் இறுதியாக வேள்விப் பொருளாகவே அக்கினியிடம் கொடுத்துத் தகனம் செய்யப்படுகின்றது. இதைச் செய்யவேண்டிய பொறுப்பு இறந்தோரைச் சார்ந்ததாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

புராதனத் தமிழ் மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளுள் இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகள் வீரவணக்கம்

தோன்ற வழி வகுத்தது என்பது அறிஞர் கருத்தாகும். தென்னகத்தில் காணப்படும் பெருங்கல் வளைவுப் புதைகுழிகள் (Mega lithic Monuments) மூலம் இறந்தவரை அடக்கம் செய்வதில் அச்சமுதாயத்தினர் எத்துணை சிரத்தை தகாட்டினர் என்பதை அறிய முடிகின்றது. பெருங் கற்களைக் கொண்டு வட்டமாக வளைக்கப்பட்ட இடங்களே அக்கால "மயானங்கள்" எனலாம். இவற்றை நோக்கும் போது மிகப் பழைய காலத்திலிருந்தே இறந்தவரை அடக்கம் செய்வதிலும் அவர்களது தேவைக்காகப் பொருள்களைப் படைப்பதிலும் பண்டைக் கால மக்கள் காட்டிய ஈடுபாட்டினை அறிய முடிகின்றது. புராதன மனிதன் நடைமுறை அநுபவத்தின் அடிப்படையில் அவன் உடம்பு வேறு உயிர் வேறு எனப் பிரித்தறியும் நிலையில் இல்லை. உடலையும் உயிராக மதித்த நிலையிலேயே தாழி, கல்லறை முதலியவற்றுள், ஆயுதங்கள் உணவுப் பொருட்கள், கலன்கள் ஆகிய வற்றை வைத்திருக்க வேண்டுமென அறிஞர் கருதுவர். இவ்வகையில் புராதன மூதாதையர் வழிபாடு சிறப்புப்பெறுகின்றது. பழந்தமிழர் வழிபாட்டு முறைகளில் ஒன்றாகிய வீரவணக்கம் பண்டைத் தமிழரின் இழவு வினைகள், பிரேத அடக்க முறை முதலியவற்றுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளதாக அறிஞர் குறிப்பிடுகின்றனர்.

இத்தகைய நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்துசமய மரபிலும் தகனத்தின் பின் அஸ்தியைச் சேர்த்து தீர்த்தச் சிறப்புப் பெற்ற இடங்களில் கரைத்துத் தெய்விக நிலையை அடையச் செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. அதனையடுத்துச் செய்யப்படும் பாஷாண பூசை உள்ளிட்ட ஏனைய கிரியைகளாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத் தக்கதாகின்றது. இத்தகைய கிரியைகள் ஆன்மாவுக்குத் திருப்தியையும் சாந்தியையும் அளிப்பன என்ற நம்பிக்கையும் நிலவுகின்றது. பிரபூதபலி, பிண்ட வடிவில் இறந்தாரை வழிபடுதல், பிதிர் வடிவமாக ஆக்கும் சபிண்டீகரணம், தானம் போன்றவைகளும் ஆன்மாவுக்குரிய பலனை நல்குவன. இத்தகைய கிரியைகள் ஒவ்வொரு மாதத்திலும் நாற்பத்தைந்து நாளிலும் ஆறும் மாதத்திலும் வருடக் கடைசியிலும் இடம்பெறத் தக்கன. இதனைத் தொடர்ந்து வருடந் தோறும் இடம் பெறுவது சிராத்தமாகும். அவரவர் இறந்த நாளாகிய சிராத்தத்தை விட அமாவாசை, பூரணை ஆகிய நாட்களிலும் பிதிரர்களுக்குரிய வழிபாடு நிகழும்.

இவ்வாறாக இந்து சமய மரபில் இறந்தவர்களுக்கென நிகழும் கிரியைகள் அவரது ஆன்மாவைப் புனிதப்படுத்திச் சாந்தியடையவும் திருப்தி கொள்ளவும் துணைபுரிவன. கிரியை செய்வோர் சிரத்தையோடும் அன்போடும் செய்யவேண்டிய சிறப்புக் கருதியே சிராத்தம் என்ற பெயரும் பொருத்தமாக அமைந்துள்ளது. சிராத்தம்செய்யும் போது எள்ளும் தண்ணீரும் இறைத்தல் இறந்த பிதிரர்கள் நற்கதியையும் திருப்தியையும் அடைவதற்காகச் செய்யப்படுவதாகும். இந்நாளில் ஏழைகள், அநாதைகள் ஆகியோருக்கு உணவளித்தல் பிதிருக்குத் திருப்தி தரும். சிராத்த முடிவில் குருவின் ஆசிபெறுதல் முக்கியமாகும். விவாகம் போன்ற மங்கள காரியம் நடைபெறும் போது அக்குடும்பத்திற்கு முன்னோரது ஆசிவேண்டிப் பிதிரர் வழிபாடும் தானமும் வழங்கும் மரபும் இவ்வகையால் செய்யப்படும் கிரியைகள் பிதிரர் சாபத்தை நீக்கி நல்வாழ்வு பெற வழிவகுக்கும் நம்பிக்கையும் காணப்படுகிறது. இந்து சமய மரபில் அபரக் கிரியைகள் ஒருவனது ஆன்ம ஈடேற்றத்திற்குத் துணைபுரியும் காரணத்தால் காலங்காலமாகச் சிரத்தையோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். ஒவ்வொரு தலைமுறையையும் இணைக்கும் சிறந்த சாதனமாகவும் இக்கிரியைகள் விளங்கி வருகின்றன. ●

# துணை நூற்பட்டியல்

இருக்கு வேதம், தாமோதரபட்டர், ஸ்ரீபாத சர்மா (பதி) 1957

காரைக்காலம்மையார் பிரபந்தங்கள், (அம்மையார் திருமுறை) திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ வைகுண்டம், 1957

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம், சைவசித்தாந்த மகாசமாஜ வெளியீடு சென்னை, 1935

திருக்குறள், வரதராசன், மு. (உரை), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1976

திருமந்திரம், உலகநாத முதலியார், வி. (பதி.), சென்னை, 1924

திருநாவுக்கரசர் தேவாரம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீவைகுண்டம், 1957

அருணாசலம், ப., திருமந்திரக்கோட்பாடு, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1982

கைலாசபதி, க., பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், பாரிநிலையம், சென்னை, 1966

சிவபாதசுந்தரம் சு. சைவக்கிரியை விளக்கம், (3-ஆம் பதி.) சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம், 1978

சுப்பிரமணியம், ஏ. வி. ஆன்மிக விளக்கு, கலைஞன் பதிப்பகம், சென்னை, 1980

தங்கம்மா அப்பாக்குட்டி, சைவக்கிரியைகளும் விரதங்களும், (மலேசிய இந்து சங்க மாதர் வெளியீடு, தெல்லிப்பழை, 1977

மகாகவி பாரதியார், பகவத் கீதை, (மொ. பெ.), 2-ஆம் பதி, பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச் சாரிய சுவாமிகள், தெய்வத்தின் குரல் (3-ஆம் பகுதி), கணபதி, ரா, (தொகுப்பு) சென்னை, 1982

Macdonall, A. A. A Vedic Reader (6th Ed.), Oxford University Press, Madras 1965

Radhakrishnan S. The Bhagavadgtia (Trans.) (5th Ed.) Blackie & Sons. (India) Ltd New Delhi. 1976.

693

# புறநானூற்றில் நிலையாமைக் கோட்பாடு

திரு. க. சொக்கலிங்கம் எம். ஏ.
அதிபர், யாழ் நல்லூர் ஸ்தான
சி. சி. த. க. பாடசாலை

உலக வாழ்க்கை நிலையற்றது: அது புன்னுனிமேல் நீரினை ஒத்து அழிந்துபோம்; நில்லாதவற்றை நிலையின என்று கொள்ளல் அறியாமை. இறப்பு எவராலும் தடுக்க முடியாதது: உலகிலே தோன்றிய எல்லாச் சமய நெறிகளும் இவ்வுண்மையை ஏற்றுக் கொள்கின்றன. எனினும் இந்திய சமய நெறிகள் நிலையாமைக்குக் கொடுக்கும் அழுத்தம் விதந்து கூறவேண்டுவதாகும்: "நிலையில்லாததும் மாறிமாறி வருவதுமான பிறவி என்னும் கட்டினை அறுத்துப் பேரின்பமாகிய வீடுபேற்றினை அடைய மக்கள் யாவரும் முயலல் வேண்டும்" என்று அவை வலியுறுத்துகின்றன. இந்தியாவின் நிலக்கூறுகளுள் ஒன்றான தமிழ் நாட்டிலும் இக்கோட்பாடு பண்டைநாட்டிலிருந்து களாய் அடிப்பட்டு வந்துள்ளமை இயல்பானதே.

தமிழ் நாடும் தமிழ் மக்களும் இந்து சமய நெறியின் ஆளுமைக்கு உட்படாத ஒரு காலமும் இருந்தது. ஆனால் அக்காலப் பிரிவின் வரலாற்று விரிவினை அறிந்து கொள்வதற்கான சான்றுகள் பெருமளவு கிடைத்தில. எமது மிகப்பழைமையான சங்க இலக்கியங்கள், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுப் பழைமை கொண்டவை என இலக்கிய வரலாற்றாய்வாளர் கொள்வர். பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை; இவை எம் முன்னோரின் வாழ்வியலையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுவன. எனினும் இவற்றுள்ளும் ஆங்காங்கே இந்து சமயக் கருத்துக்கள் தலைதூக்குகின்றன. இந்து சமயக் கருத்துக்கள் மட்டுமன்றிச் சமணம், பௌத்தம் ஆகிய புறச் சமயக் கருத்துக்களும் காணப்படுகின்றன. இக் கருத்துக்களுள் நிலையாமை பற்றியதும் ஒன்றாகும்.

வழிபாட்டு முறைகளில் தமிழருக்கே உரிய பூதவழிபாட்டோடு வேத, ஆகம வழிபாடுகளும் நிலவியமைக்குச் சான்றுகள் உண்டு; வழிபாடு மட்டுமன்றி, அக்காலத்து மெய்யியற் கோட்பாடுகளும் ஒழுக்கவியற் கோட்பாடுகளும் சங்க இலக்கியங்களில் ஓரளவு காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களுள்ளே முற்பட்டவை எனக் கொள்ளப்படுவனவற்றுள் புறநானூறும் ஒன்று. சங்ககாலப் போர்கள், வீரம், வள்ளன்மை, விருந்தோம்பல் முதலான பண்பாட்டுக் கோலங்கள் பலவும் புறநானூற்றிலே அழியா ஓவியங்களாய்த் தீட்டப்பட்டுள்ளன. இவற்றோடு சமய, மெய்யியற் கோட்பாடுகளும் பரவலாக உள்ளன.

பொதுவாகப் புறநானூறு உள்ளிட்ட சங்கநூல்கள் யாவுமே பெருமளவு உலகியல் நோக்கையே கொண்டுள்ளன என்று கூறப்படுவதுண்டு. இயற்கையோடு இணைந்து அதன் குழந்தைகளாய் விளங்கி இன்பத்தை நயந்தும் துன்பத்தை உவர்த்தும் வாழ்ந்த அக்கால மக்களுக்கு இவ்வுலக வாழ்வே முதன்மையானதாய்த் தோன்றியதில் வியப்பில்லை. "இம்மைச் செய்வன மறுமைக்கு ஆம்" என்பது அறவிலை வணிகம் என அக்காலத்திற் கருதப்பட்டது. ஆற்றல், அறிவு, பண்பு, வீரம், கொடை என்பன அமையுமாறு வாழ்க்கையை ஆக்கிக்கொள்வதில் பண்டைத் தமிழர் நிறைவு கண்டனர். இந்நிறைவினை உள்ளது உள்ளவாறு வெளிப்படுத்துவதே புலவனின் குறிக்கோளாய் அமைந்தது.

மன்னர்களுக்கு மண்மீது பெருநசை இருந்தது; "இவ்வுலகம் யாவர்க்கும் பொது" என்று கூறப்படுவதை அவர்கள் வெறுத்தனர். மான உணர்வு அவர்களிலும் மக்களிலும் ஓங்கி நின்றது. புகழெனில் உயிரைக் கொடுக்கவும் அவர்கள் தயங்கியதில்லை; இழிவு எனில் உலகொடு வரினும்

கொள்ளார்: 'தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர்கள்' இவர்கள். போரும் வீர இறப்பும் இவர்களுக்கு உயிர்நாடிகள்.

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.
(புறநானூறு: 312)

என்ற பாடல் அக்காலத்தவரின் குறிக்கோளினையும் பூட்கையையும் நன்கு எடுத்துக் காட்டுவதாகும். இத்தகையோர் 'வாழ்வாவது மாயம். இது மண்ணாவது திண்ணம்' என்ற அளவிற்கு வாழ்வினை உவர்ப்பர் என்று எண்ணுவது கடினமே.

தொல்காப்பியம் தமிழில் எழுந்த முதலாவது இலக்கண நூல். எழுத்து, சொல் என்பவற்றோடு இலக்கியத்திற் கையாளப் படும் பொருளுக்கும் இலக்கணம் கூறுவது இந் நூலின் சிறப்பு. போர் தொடர்பான ஒழுக்கம் இலக்கியத்திற் புறத்திணையாகக் கொள்ளப்படும் எனத் தொல்காப்பியம் வரையறை செய்யும். இப்புறத்திணையில் புறத்துக்குப் புறமான ஒழுக்கங்களுள்ளே காஞ்சித்திணை அடங்கும். காஞ்சிக்கு வரைவிலக்கணம் கூறுகையில்

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே.
(தொல். பொருள். புறத்திணையியல்; 78)

என்கிறது தொல்காப்பியம். 'நிலையில்லாதது இவ்வுலக வாழ்க்கை என்பதால் குறுகிய இந்த வாழ்க்கையிலே துய்க்கவேண்டியன யாவற்றையும் துய்த்து விடலே அறிவுடைமை' என அக்கால மக்கள் கருதி வாழ்ந்தனர் என்றே கொள்ளக் கிடக்கின்றது.

பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினிது உறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே.
(மதுரைக்காஞ்சி: 778 - 82)

என்பது மாங்குடி மருதனார், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குச் செவியறிவுறுத்திய அறிவுரை. 'வீடுபேறு நிமித்தமாகச் சான்றோர் பல்வேறு நிலையாமையை அறைந்த மதுரைக்காஞ்சி, காஞ்சித்திணைக்கு உதாரணம்' என நச்சினார்க்கினியர் தமது உரையிலே எடுத்துக் காட்டியுள்ள போதிலும் மதுரைக் காஞ்சியில் இம்மை வாழ்வினைத் துய்த்து இன்பம் பெறுதற்கான வழியே பெரிதும் பேசப்படுகின்றது எனலாம். இதிலிருந்து எம் முன்னோர் இன்பியற் கோட்பாடே (Optimism) பெரிதும் உடையோர் என்பது புலனாகும்.

இருப்பினும் வாழ்நாள் முழுவதும் தம்மைக் காத்தற்குப் புரவலர்களை நாடிச் சென்று அவர்களின் பரிசிலுக்காக அலைந்த புலவர்களுக்கும் பாணர்கள் முதலான கலைஞர்களுக்கும் வாழ்க்கை எல்லாக் காலத்திலும் இன்ப மலர்ப் படுக்கையாய் இருந்தது என்று சொல்லல் இயலாது. வறுமையும் துன்பமும் இத்தகையோரை வாட்ட முற்பட்ட காலங்களிலே இவ்வுலக வாழ்வினை வெறுத்து நிலையாமை பேச அவர்கள் முற்பட்டதும் உண்டு. தம் காலத்தில் மேலோங்கி வந்த வைதிக, சமண, பௌத்த சமய நெறிகளின் செல்வாக்கினாலும் இவர்கள் ஈர்க்கப்பட்டு நில்லா உலகத்து நிலைமை பற்றி எண்ணிப் பார்த்துத் தம் கருத்துக்களைப் பாடல்களில் வடித்திருத்தலும் கூடும். இவ்வாறான நிலைகளிலே தோன்றிய பாடல்கள் சில புறநானூற்றிலே காணப்படுகின்றன.

'நானிலம் யாவும் ஓர் நாடக அரங்கு. இறப்பு என்ற திரை விழும்வரை ஒவ்வொருவரும் இவ்வரங்கிலே தத்தமது உறுப்புக்களாய் அமைந்தவற்றை ஆடிச் செல்கின்றனர்' என்ற கருத்தினைத் திருவள்ளுவர் தொடக்கம் ஷேக்ஸ்பியர் ஈறாக உலகப் பெரும்புலவர் பலரும் எடுத்துக் காட்டிச் சென்றுள்ளனர். இவர்களின் இக்கருத்தின் ஒலியானது புறநானூற்றிலும் கேட்கின்றது.

'விழவின், கோடியர் நீர்மைபோல முறைமுறை
ஆடுநர் கழியும்இவ் வுலகத்து ... ............
(புறநானூறு: 29)

'இறப்பு என்பது புதுமையானது அன்று. அது தவிர்க்கமுடியாதது என்பதாலே வாழ்வை இனிது எனக் கருதி மகிழ்வது பேதைமை. பிறவி ஒரு பேராறு. அதில் உயிர் எப்பொழுதும் புதிய புதிய பிறப்புக்கள் எடுத்துக் கரையில் அடியுண்டும் பின் நீரில் இழுப்புண்டும் மாறிமாறிச் சிறு கோல் போல அடியுண்ட வண்ணம் இருக்கிறது.' என்ற உண்மையையும் அக்காலச் சான்றோர் உணர்ந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே

என்றும்

வானம் தண்டுளி தலைஇ ஆனது
கல்பொரு திரங்கும் மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ..............
(புறநானூறு: 192)

என்றும் வரும் பாடல் அடிகளிலே இக்கருத்துக்களை நாம் காணலாம். 'கூற்றுவன் என ஒருவன் உள்ளான். அவன் உடலிலிருந்து உயிரைக் கூறுசெய்பவன். அவ்வாறு அவன் கூறுசெய்வதற்கு உயிர்கள் பலவாக இவ்வுலகில் உள்ளன. இவ்வுண்மையைத் தலையாலங்கானத்துப் போர்க்களத்திலே நெடுஞ்செழியன் தனது செருவென்றியால் எடுத்துக் காட்டினான்' என்பது புறநானூற்றுப் பத்தொன்பதாம் பாடல் தரும் செய்தியாகும். இவ்வரசர் பெருமானின் சிறப்பினைக் கூறும் மற்றொரு பாடலில் உயிரொடு அதனைத் தாங்கிநிற்கும் உடலும் முதிர்கின்றது என்ற கருத்துக் காணப்படுகின்றது.

நின்னொடு,தொன்றுமூத்தஉயிரினும்உயிரொடு
நின்று மூத்த யாக்கை. ... ... ... ...
(புறம்: 24)

'மூத்திடும் யாக்கை ஒரு நாள் அழியும். உயிர் என்றும் அழிவதில்லை. அது தன் வினையின் இயல்பிற்கேற்பத் துறக்கத்தையோ நரகத்தையோ அடையும்' என்ற சமயக் கருத்துப் புறநானூற்றுக் காலத்திலேயே தோன்றிவிட்டது என்பதற்கு

நோற்றோர் மன்றநின் பகைவர் நின்னொடு
மாற்றோர் என்னும் பெயர்பெற்று
ஆற்றா ராயினும் ஆண்டுவாழ் வோரே
(புறம்: 26)

என்பதற்கு இப்பாடல் அடிகளிலே வீரஇறப்புக் கிடைத்து அதனால் துறக்கம் புகுவதும் நோன்பினாலேயே ஏற்படுவதாகும் என்ற உண்மையும் பெறப்படுகின்றது.

மன்னர்தம் வீரவாழ்வோடும் மாந்தரின் உலகியல் வாழ்வோடும் இணைந்து எளிமையாகப் புலப்படுத்தப்படும் யாக்கை நிலையாமைக் கோட்பாடானது, புலவர்களின் மன இடிவு நிலையில் வீறுடன் வெளியாவதையும் புறநானூற்றின் சில பாடல்கள் உணர்த்துகின்றன.

ஓரேருழவர் என்ற புலவர் வறுமையால் அலைப்புண்டவர். நிலையில்லாச் செல்வம் அவர் வரையிற் கானல் நீராய் அவரை அலைக்கழிக்கின்றது. இதனால் வாழ்க்கையே அவருக்கு உவர்த்து விடுகின்றது. ஆனாலும் இல்லப் பற்றை அவரால் துறத்தல் கூடவில்லை. அது அவரைக் கட்டித் தளையிட்டு விடுகின்றது. இந்நிலையிலே பற்றினை அறுத்தலுக்கும் உறவுப் பற்றுக்குமிடையே அவரின் உள்ளம் ஊசலாடுகின்றது. "தோலைப் புடைத்து விட்டது போன்ற பரந்த வெளியிலே மான் ஒன்று தனது உயிரைக் காத்திட ஓடுகின்றது. வேடன் ஒருவன் அதனைத் துரத்துகின்றான். இந்த மானும் தன் உயிரைக் காத்துத் தப்பிப் பிழைத்தல் கூடும். ஆனால் எனக்கோ வாழ்க்கை என்ற களர் நிலத்திலே வறுமை என்னும் வேட்டுவன் துரத்துகையில் தப்பிப் பிழைத்தல் இயலாததாய் உள்ளது. ஏனெனில் இல்வாழ்க்கை, எனது ஓட்டத்தைத் தடுத்து நிறுத்திக் கட்டித் தளையிடுகின்றது. என் செய்வேன்!' என்று அவர் இரங்குகின்றார்.

அதளெறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல
ஓடி உய்தலும் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே
(புறம்: 193)

'வாழ்வினை என்பது மிகக் கொடுமையானது; அது ஒரு மனையிலே மங்கல பேரிகைகளை முழங்க வைக்கின்றது. மற்றொரு மனையிலோ சாப்பறையை ஒலிக்கச் செய்கின்றது. மணவினையால் ஒன்று கூடிய மணமக்கள் பூவணி அணிகின்றனர். இறப்பினாலே பிரிவுத்துன்பம் அடைந்தோரின் விழிகளிலோ கண்ணீர் வழிந்தவண்ணம் உள்ளது. இவ்வாறு இன்பமும் துன்பமும் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு வடிவங்களிலே தோன்றும் வண்ணம் மாந்தரைப் படைத்த நான்முகன் பண்பில்லாதவன்; இதன் மூலம் உலகமே துன்பமயமானது என்பதை உணர்வோர் இனியதாகிய மறுமையினைக் கருதி அதற்கான வழிகளிலே தலைப்படுதல் வேண்டும்.'

ஓரில் நெய்தல் கறங்க ஓர் இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூ அணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப் பண்பி லாளன்
இன்னாது அம்ம இவ் வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே
(புறம் : 194)

இன்னாமையை இனியதாய் ஆக்குவது எது? நிலையற்ற வாழ்வினை நிலைபேறு உடையதாய் ஆக்கவல்லது எது? அறநெறியோடு கூடிய வாழ்க்கையேயாகும். பிறர்க்கு இன்பம் தருவனவற்றை நாடி ஒருவன் இயற்றுதல் வேண்டும். அவ்வாறு இயற்றுவதற்கு வாய்ப்பில்லாதவன் பிறருக்கு நன்மை செய்யாதவிடத்தில் தீமையாவது செய்யாதிருத்தல் வேண்டும். நாம் இளமையுடையோம், முதுமை அணுகும் காலத்து அறஞ்செய்து இளமையிற் செய்த தீமைகளுக்குக் கழுவாய் தேடிக் கொள்ளலாம் என்று சிலர் கருதல் கூடும். அது தவறானது. ஏனெனில் முதுமையைப் போலக் கொடியது வேறு இல்லை. இவ்வுண்மையை நன்குணர்ந்த நரிவெரூஉத் தலையார் என்ற நற்றமிழ்ப் புலவர் கூறுவன இவை:

"பலவாகிய நற்பண்புகள் வாய்ந்த அறிஞர்களே, கயல்மீன் முள்ளையொத்த உடற் சுருக்கமும் நரையும் அமைந்து பயனற்ற மூப்புக்கு உள்ளான நல்லறிஞர்களே, மழுவினையும் தளைக்கும் கயிற்றினையும் கொண்டு கொடிய திறன் பொருந்திய கூற்றுவன் உங்களைப் பிணிக்கின்ற போதினில் நீங்கள் பெரிதும் கழிவிரக்கம் கொள்ளலாம். ஆனால் அதனாலாகும் பயன் இல்லை; எனவே உங்கள் வாழ்நாட் காலத்தில் நல்லவற்றை உம்மாலே செய்ய முடியாதவிடத்தும் தீயவற்றை செய்வதினின்றும் தவிர்ந்து கொள்ளுங்கள். இச் செயலையே எவரும் விரும்புவர்; அன்றியும் நன்னெறியிலே உம்மைச் செலுத்துவதும் இந்த நன்னெறிக்கேயாகும்.

பல்சான் றீரே பல்சான் றீரே
கயல் முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்
பல்சான் றீரே பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றி ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுவே
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படுஉம் நெறியுமா றதுவே
(புறம் : 195)

"நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருப்பாயாக" என்று விவேகானந்தர் சென்ற நூற்றாண்டில் இடித்துரைத்ததனை இப்பாடலுடன் ஒப்பிட்டு நோக்கலாம்

இறப்பு என்ற நிலையான உண்மையை நிலையாமை என்ற ஒளியில் வைத்து நோக்கியதன் பயனாகவே இப் புறப்பாடல் உருக்கொண்டது எனலாம்; தொகுத்துப் பார்க்கும் பொழுது உலகியலில் ஆழ்ந்திருந்த சங்ககால மக்கள் அதற்கு முரணாய் அமைந்த நிலையாமை பற்றியும் அவ்வப்போது எண்ணத் தவறவில்லை என்பதும் உண்மையே.

# அபரக்கிரியை விளக்க வினாவிடை

**பண்டிதர் மு. கந்தையா பீ. ஏ.**

**1. இறந்தவருக்குக் கிரியை செய்வதன் அர்த்தமென்ன ?**

இறந்ததன் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்.

**2. இறந்த பின்பு அவருக்கு எங்கே வாழ்வு ? எப்படி வாழ்வு ?**

அவருக்குச் சுவர்க்கத்திலும் நரகத்திலும் வாழ்வுண்டு. திரும்பவும் அவர் பூமியிற் பிறந்து முன் வாழ்ந்ததுபோல வாழும் வாழ்வுமுண்டு. சுவர்க்க வாழ்வு இன்பாநுபவம். நரக வாழ்வு துன்பாநுபவம். திரும்பவரும் பூமி வாழ்வு இன்ப துன்பக் கலப்பான அநுபவம்.

**3, இறந்த பின்பு அவர் இங்கில்லை: அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி ?**

இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள்வரை அதாவது அந்தியேட்டிவரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவது தான்விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கிறார். அந்நிலையில் உடலைத் தொடர்புபடுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழுங் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவ சாதியார் ஏற்று அவர்கள் எங்கெங்கிருந்தாலும் அங்கங்கு சேரச் செய்கிறார்கள்.

**4. இக் கிரியைகளை அபரக் கிரியைகள் என்பதேன் ?**

அவை இறந்தபின் செய்யப்படுங் கிரியைகள் என்பதனால்தான். அபரம் என்றால் பின்.

**5, அபரக் கிரியைகள் எவை யெவை ?**

பிரேதக் கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி. மாசிகம், ஆட்டைத் திதி, திவசம் என்பனவாம்.

**6. அபரக் கிரியைகள் உடலுக்காகவோ உயிருக்காகவோ ?**

உயிருக்காகவேதான்; ஆனால் அந்தியேட்டிவரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.

**7. இக் கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம் ?**

இக் கிரியைகளால் உயிருக்கு இரு விதத்தில் நன்மை விளையும்; தனது சரீரத்தை விட்டுக் கிளம்பிய உயிர் அதன்மேல் பெறவேண்டிய அநுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று. படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

**8. சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம் ?**

அபரக் கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. அதற்குத் தக்க அளவு உயிரைப்பற்றியுள்ள மலபந்தம் விலகிக் கொடுக்கும். மலம் விலகுமளவுக்குச் சிவத் தன்மை சிறிது சிறிதாகப் பற்றும். கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும்போது முழுமையாக அது சிவத் தன்மை பெற்றுவிடும்.

**9. நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்றுதானே எல்லாரையும் குறிக்கிறார்கள்; அப்படியானால் கிரியைக்கு என்ன அவசியம் ?**

அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடையவேண்டும் என்ற நல் விருப்பத்தினால். இப்படி நல் விருப்பத்தினால் உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக்கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்யவேண்டும்;

10. பிரேதக் கிரியையில் கும்பபூசை, அக்கினி காரியங்கள் எல்லாம் செய்வதேன்?

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள்தான்.

கும்பங்களில் உருத்திரனையும் திக்குப் பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. அக்கினியிலும் சிவனை எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகிறது. கும்பங்களைப் பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டாகும். அந் நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுதலால் நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாகப் பூசிக்கப்பட்டதால் அதில் ஏற்பட்ட சிவத் தன்மை அந்த அக்கினியினால் உடலை எரிக்கும்போது அதன் சிவத் தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலை விட்டுப் பிரிந்தாலும் ஒருவகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும். உயிருக்கும் அச் சிவத்தன்மை பதியும்.

11. உடலை விட்டுப்பிரிந்த பின்னும் உயிர் உடல் தொடர்பு நீங்காதிருக்கிறதென்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்பமுடியும்?

அப்படி அது தொடர்பு நீங்காதிருப்பதை நாங்கள் காட்சியாற் காணமுடியாது. காணும் பக்குவம் சாதாரணமான எங்களுக்கில்லை. பக்குவமுள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். அவர்கள் சொல்வதை நாம் அநுமானித்து நம்புவதற்குரிய ஏதுக்கள் நடைமுறையில் இருக்கின்றன. இறந்தவர் உயிர்விடும்போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர், அல்லது தண்ணீர்ச்செம்பு வைப்பதுண்டு. 'எட்டு' என்ற சைபவத்திலன்று அவர் விரும்பி அருந்தி வந்த சகல உணவுப்பண்டங்களும் படைப்பதுண்டு. அங்கே பாடல் படிப்புகள் முடிந்தபின், படைத்தவற்றிற் சிறிது சிறிது எடுத்து மூகட்டை நோக்கிக் காட்டுவதுண்டு. இவையெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரித்தபின்னுங்கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

12. அங்ஙனமாயின், அவர் சுவர்க்க நரகம் போவரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது. இப்போ இங்கேதான் இருக்கிறார் என்பது அதற்கு மாறுபாடாயிருக்கிறதே!

அதற்கு இது மாறுபடாது. எங்ஙனமெனில், இப்போ சொல்லப்படுகிற இந்தத் தொடர்பு முற்றாக நீங்கப்பட்டதன் மேல்தான் அவர் சுவர்க்க நரகங்களிற் செல்வர். அந்தியேட்டியில்தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

13. அந்தியேட்டியில் அது நீக்கப்படும் என்பது எப்படி?

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக்கோடிட்ட மண்டபத்தில் தெனகிழக்கு மூலையில் ஐந்து நிற மாக்கள் சதுரவடிவாகப் பரப்பப்பட்டிருக்குமே! அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்சபூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும். பஞ்சபூதங்களால் அமைந்தது அவர் உடம்பு. பஞ்சபூதங்கள் மூலமாகத்தான் அவர் உடம்பில் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில், மாவடிவான சதுரங்களில் பஞ்ச பூதங்களைப் பொருத்தி அவ்வப்பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கிவிடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.

14. அந்தியேட்டியிலும் தர்ப்பையில் ஆளுருவஞ்செய்து குளிப்பாட்டி, பொற்சுண்ணம் இடித்துச் சுடுகிறார்களே அது ஏன்?

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கிறதென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்.

15. சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடே அந்தியேட்டியும் செய்கிறார்கள்? அது ஏன்?

அதையும் அறியத்தான் வேண்டும். சாதாரணமாக நம்மவரைப் போலல்லாது சிலர் விசேஷமான தீக்ஷை, ஆசாரம், ஒழுக்கம், சாதனை, சிவபூசை ஒழுங்கு உள்ளவர்களாயிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விசேட பக்குவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத் தொடர்பை நீக்கிவிடக் கூடிய தகுதியும் இருக்கிறது. அதனால்தான் அப்படி நிகழ்கிறது.

16. அஃதிருக்க பிரேதக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ண மிடிக்கிறார்களே அது எதற்காக?

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப்படும். அவருடைய தநு, கரணம், புவனம், போகம் எல்லாவற்றையும் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில்தான் செய்யப்படுகின்றது.

17. பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப்பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே! அது ஏன்?

பொற்சுண்ணமிடித்தலினால் இறந்தவருடைய தேகத் தொடர்பு நீக்கப்பட அவர் சிவலோகஞ்சேரத் தகுதியாகிறார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும் பட்சத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் பொலிவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகப் பாடல்களில் உண்டு. அதனாலேயே பொற்சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்புபட்டிருக்கின்றது. உண்மையில் சிவலோகஞ் சேருந் தகுதியுள்ளவர் விஷயத்தில் அது உண்மையாய் முடியும். மற்றவர் விஷயத்தில் உபசாரமாகும் என்றாலும் பரவாயில்லை. ஏனெனில், இவர்களும் எப்போவெனினும் தமக்குரிய காலத்திற் சிவலோகமடைய வேண்டியவர்களே. அது நியதமான உண்மை. நியதமான உண்மையை உபசாரமாகக் கையாளுவதிற் பழுதில்லை. அது திருத்தத்துக்குச் சிறந்த வழி என்பது சைவ விளக்க நீதி.

18. அந்தியேஷ்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?

அந்தியேஷ்டி முடிவில் இறந்தவரது வீட்டில், நக்னதானம், ஏகோதிட்டம், தசதானம், சபிண்டீகரணம் முதலிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத்தொடர்பு நீங்கப்பெற்றவர் தனக்குரிய சுவர்க்க, நரக கதிகளிற் செல்வார். அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமையானது; இருளானது; விக்கினங்களோடு கூடியது. ஆதலால் அவ்வித கஷ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனால்தான்.

19. வீட்டுக்கிரியை அழைப்பிதழிற் சிலர் சபிண்டீக்கிரியை என்று மட்டும் குறிக்கிறார்களே அது ஏன்?

அது வேறொரு விசேஷத்தினாலுமல்ல, வீட்டுக் கிரியையின் பகுதிகள் என மேற்சொன்னவற்றிற் சபிண்டீகரணம் பிரதானமானது என்பதனால் தான். எங்ஙனமெனில், இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப் போய்த் தன் சுவர்க்க நரகப் பேறுகளைப் பெறுவதற்கு, முன் சொன்ன பிதிரர்களின் சகாயம் வேண்டும். அதற்காக அவர் பிதிரர்களோடு சேர்க்கப்படவேண்டும். பிதிரர்களுக்கு அறிகுறியாக, மாவுடன் எள், அரிசி, தேன், சர்க்கரை, தயிர் குழைத்துருட்டிய பிண்டங்களையிட்டு வைத்து அவற்றுக் கெதிர் இறந்தவர்க்கு

அறிகுறியாக ஒருபிண்டமிட்டு, கிரியை செய்பவர் எல்லோரையும் ஒரு சேரப் பூசித்து எல்லோருக்கும் நைவேத்தியம் கதலிபல தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்துத் தூப தீபாராதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப்பெயர் பெற்றது.

**20. அவ்வாறு பிண்டத்தாற் குறிக்கப்படும் பிதிரர் என்பார் யார்? அவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு யாது?**

பிதிரர் என்பார் படைப்புக்காலத்திற் சிவனால் படைக்கப்பட்ட ஒரு தேவசாதியார். இறந்தவர் நலன்களைக் கவனிக்கும் அலுவலர்களாகச் சிவனால் நியமிக்கப்பட்டவர்கள் அவர்கள். இறந்தவர் ஒரு ஆண் ஆனால் அவரது பிதாமகர், (பேரன்) பிரபிதாமகர் (பூட்டன்) என்றதற்குப் பொருந்தும் நிலைகளில் அவர்கள் இருப்பர். இறந்தவர் பெண்ணானால் அவரின் மாதா, மாதாமஹி, பேர்த்தி, பிரமாதாமஹி பூட்டி என்ற முறைக்குப் பொருந்தும் நிலைகளில் இருப்பார்கள். அதாவது இறந்தவர் பேரில், அவரது தகப்பன், தாய், பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி என்போர்க்கிருக்கும் கரிசனைக்குச் சமானமான கரிசனையுள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள்; இறந்தவர் பேரில் அவர்களைக் குறித்துச் செய்யப்படும் எள்ளுந் தண்ணீருமிறைத்தற் (திலதர்ப்பணம்) கிரியையால் அவர்கள் திருப்தியுற்று இவரைக் குறித்துச் செய்யும் தான தருமப் பலன்களை அவர்கள் ஏற்று அவற்றின்மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பார்கள். அதே வேளை, கிரியை செய்பவர்மேல் அவர் தந்தை, தாய் முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறவும் வகை செய்வார்கள், அதனால்தான் பிதிர்க் கடன் 'பிரதானகடன்' எனப்படுகிறது.

**21. இப்படியான பரிவர்த்தனைகள் (கொடுக்கல் வாங்கல்கள்) உண்மையென நம்பலாமா? இவற்றுக்கான தொடர்பு சாதனங்கள் எங்கே?**

ஏன் நம்பக்கூடாது? சந்திரமண்டலத்துக்கு ஏதும் அனுப்பினாற் போய்ச்சேரும் என்று இப்போ சில வருடங்களுக்குமுன் யாருமே நம்பியதில்லை; இப்போ நம்புகிறார்கள். உண்மையில் பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் மெயில்வண்டியோ, தந்திக் கம்பியோ ஒரு சாதனமுமில்லை. ஆனால் அனுப்பும் பொருள் போய்ச்சேர விஞ்ஞானத்தில் தொடர்பு சாதனம் இருக்கிறது. இச்சாதனத்தை மனிதன் இப்போதான் கண்டறிந்தான் என்பதேயன்றி இதற்குமுன் அதற்கு வழி இருந்ததில்லை என்பதற்கில்லை. அந்த அமைப்பை ஏற்படுத்தி வைத்த சிவன் மேற்குறித்த பிதிரர்களுக்கும் பூமியிலுள்ளார்க்கும் இடையில் அப்படியொரு தொடர்புக்கான சாதனங்களை அமைத்து வைத்திருக்கமாட்டார் என்பதற்கு ஆதாரமில்லை. ஆனால் கடவுள் சம்பந்தப்பட்ட தொடர்பு சாதனங்கள் அருவமாயிருந்தே தொழில் செய்யும். மனிதன் சம்பந்தப்பட்டவைதான் உருவமாயிருக்க வேண்டிய நிர்ப்பந்தமுண்டு. எனில் சந்திரமண்டலத் தொடர்பு சாதனம் போலப் பிதிர்மண்டல தொடர்பு சாதனமும் ஒரு காலத்தில் வரலாமோ எனில் ஆகாது. காரணம் என்னெனில், நமது சூழலாகிய பஞ்சபூதப் பிராந்தியத்துக்குட்பட்ட அளவில் தான் உருவ அமைப்பு வாய்க்கும்; அதற்கு அப்பாலான பிதிர் லோகம் முதலியவற்றுக்கு அது வாய்க்காது. தத்துவ இயல்பின்படி அது என்றும் அருவமாயிருக்கும். ஆனால் நம்பலாம்.

**22. இப் பரிவர்த்தனையில் புரோகிதராய் இருப்பவரின் பங்கு யாது?**

கிரியை செய்பவருக்கும் இறந்தவருக்கும் தொடர்பூட்டதிகாரி போலப் பிதிரர் இருப்பது போல கிரியை செய்பவருக்கும் பிதிரர்க்கும் இடையில் தொடர்பூட்டதிகாரி போல இருப்பவர் புரோகிதர். புரோகிதராவார் நல்லறிவொழுக்

சம், அக்கினிகாரியம், சிவபூசை நெறிகளும் உடையவராயிருந்தால் அவரிடத்தில் பிதிரர்கள் திருப்தியடைவார்கள். அத்தொடர்பில் இவர் ஏற்கும் தானம் முதலிய வற்றிற் பல பிதிரர்களேயடையும். அதற்குபகாரமாக இவர் தானங்களை ஏற்கும் போது ''இதம் சிவாய ந மம'' – 'இது சிவனுக்கு எனக்கல்ல' என்று சொல்லி ஏற்க வேண்டிய விதியுண்டு. தானம் சற்பாத்திரமானவர்கள் கையில் கொடுக்கப்பட்டால் சிப்பியின் வாயில் விழுந்த நீர் முத்தாய் விளேவது போலப் பெரும் பயனும் விளேயும். அந்த நிலேயில்லாத போது கமரிலூற்றிய பால்போலாகும்.

23. சிராத்தம் என்பது யாது?

அந்தியேட்டிக்குப் பின் இறந்தவரைக் குறித்து நிகழும் கிரியைகள் எல்லாம் பொதுவில் சிராத்தம் எனப்படும். சிரத்தையோடு செய்வது சிராத்தம் என்ற விளக்கத்தின் பேரில் அது அமையும். 'சிரத்தை' என்பது, கிரியை செய்பவர் இறந்தவர் மேற்கொள்ளும் அன்பு, அவரைக் குறித்துச் செய்யுஞ் செயல்களிற் காட்டும் நேர்மை, மேற்கொள்ளும் பிரயாசை எல்லாவற்றையும் அடக்கும். நம்மவர் சூழலில், ஆட்டைத்திதி, திவசம் இரண்டுந்தான் சிராத்தம் எனச் சிறப்பாகக் குறிக்கப்படுவதுண்டு. 'சும்மா, ஐயருக்கரிசி கொடுப்பது' என்ற பாவனே மட்டிலிருந்தால் அது சிராத்தமாகாது. தெய்வ சிந்தனேயும், தேவார திருவாசக பாராயணமும் உபவாசமுமாயிருந்து உத்தமமான திரவியங்களேத் தேடிப் பக்திபூர்வமாகச் செய்தாற்றான் அது சிராத்தமென்ற பெயருக்குப் பொருத்தமாகும்.

24. துடக்குக் காத்தல் என்ற ஒரு வழக்கம் இருக்கிறதே! அது என்ன? அது எதற்காக?

துடக்கு என்பது ஒருவர் தொடர்பு காரணமாக ஒருவர்க்கேற்படும் அசுசுசுப்பான அகப்புறச் சூழ்நிலேகளேக் குறிக்கும். விசேஷமாக பிறப்பு, இறப்பு, ருது வாதல் காரணமாக நிகழும் அத்தகைய அகப்புறச் சூழ்நிலேயை அது குறிப்பதுண்டு. அது தொடக்கு எனவும்படும். வடமொழியில் 'தூய்மையின்மை' என்ற கருத்தில் ஆசௌசம் எனப்படும். குறித்த நிகழ்ச்சிகள் காரணமாக சம்பந்தப், பட்டவர்களின் உடலிலிருந்து வெளிவரும் துர்நாற்றச் சார்பான திரவங்கள் கிருமிகள் முதலியன அகச்சூழ்நிலேயை மட்டுமன்றிப் புறச் சூழ்நிலேயையும் பாதிப்பதுண்டு. இறப்பு விஷயத்தில் பிரத்தியேகமான மனத்திகில், அதிர்ச்சி, அமைதியின்மை, கவலேகள் மிகுந்து அதனுல் தனிப்பட்டவரும், அவர் தொடர்புள்ளாரும், அவர் சூழலும் துடக்காகும் நிலே ஏற்படும். ஒருவர் சம்பந்தப்பட்ட துடக்கு இரத்தத் தொடர்பு அடிப்படையில் பலரைத் தாக்கும் என்பது அநுபவ உண்மை. அவ்வகையான தொடக்குக்குட்பட்ட அகப்புறச் சூழ்நிலேகள் சாந்தம், பொறுமை, நேர்மை, திருப்தி முதலிய சத்துவ குணநிலேக்குப் பாதகமானவை, பெரும்பாலும் சோம்பல், கவலே, மந்தம் முதலிய தாமச குணவிருத்திகளே அச்சூழ்நிலேயில் இருக்கும். அதனுல், சத்துவகுணவிருத்தி நிலேயில் செய்யப்பட வேண்டிய, தெய்வகைங்கரியங்கள், விரதங்கள், தானம், தவங்கள், கல்யாணம் போன்ற நன்மைக் காரியங்கள் ஆகியவற்றுக்கு அத்துடக்குக் காலம் விலக்காகும். புனித நிலேயங்களிற் பிரவேசித்தற்கும் அது தடையாகும். இந்த ஒழுங்கை அநுசரித்தல் துடக்குக் காத்தல் எனப்படும் சைவப் பண்பாட்டில் பாரம்பரியமான ஒரு நடைமுறை விதி இதுவாகும்.

மேற்காட்டியவாறான அகப்புற அசுசுசுப்புச் சூழ்நிலைகள் மாறுவதற்குக் குறிக்கப்பட்ட ஒருகால எல்லையுண்டு. இது இயற்கை நியதி. அவ்வெல்லையில் மந்திரக் கிரியை சம்பந்தமான ஒரு தூய்மை செய்தல் மூலம் அகப்புறச் சூழ்நிலையில் ஒரு திருப்தியும் பரிமளிப்பும் புதுமலர்ச்சியும் ஏற்படுதல் சாத்தியமாகும். அந்நேரத்தில் நிகழும் மந்திரக் கிரியை துடக்குக்கழித்தல், ஆசௌச நீக்கம் எனப் பெயர் பெறும்.

## அபரக் கிரியை சம்பந்தமான சில பதங்களின் விளக்கம்

சிராத்தம் :
சிரத்தையோடு செய்யப்படுவது. (சிரத்தை — பற்று, அன்பு) அபரக்கிரியை உத்தரக்கிரியை எனவும் அழைக்கப்படும். (அபரம், உத்தரம் — பின்) இறந்த பின் செய்யப்படும் கிரியை.

அஸ்திசஞ்சயனம்;
எலும்புகளைத் தொகுத்தல். இது சாம்பல் அள்ளுதல், காடாற்றுதல், கடலையாற்றுதல் என்றும் வழங்கப்படும்.

நக்னதானம்;
இறந்த உயிர் தன் வாழ்வியலுக்கு ஆதாரமாயிருந்த எத்தனையோ பண்புகளை இழந்திருக்கும் நிலையில் அவை இல்லாக் குறையை நிரப்புவதற் காகச் செய்யும் தானம்.

ஏகோதிஷ்டம்;
வீட்டுக் கிரியையில் ஒரு புரோகிதரை இறந்தவரின் சார்பிலுள்ள பிரேத சரீரத்தை ஏற்பதற்கு நியமித்து அவருக்குக் கடைசி ஒரு வருட அனுபவத்துக்குப் போதிய பொருட்களைத் தானமாகக் கொடுத்தல், (ஏகஉதிஷ்டம் — ஒருவரையே குறித்துச் செய்தல்)

பூதபலி:
இறந்து எட்டாம் நாள், குறைந்தது மூன்றாம் நாள் இறந்தவருக்குப் பிரீதியான பண்டங்களைப் பெருமளவிற் படைத்து அவரைப் பிரீதி செய்தல் இதை எட்டுச் செலவு என்றும் சொல்வர்.

அந்தியேஷ்டி
இறந்தவரின் தேகத் தொடர்பில் செய்யப்படும் கிரியைகளில் இறுதியான கிரியை (அந்தி — இறுதி. இஷ்டி — கிரியை)

ஆட்டைத்திதி
இறந்து ஓராண்டு முடிவில் இறந்த திதியில் செய்யும் சிராத்தம். இது ஆப்திக சிராத்தம் எனவும் படும். (ஆப்தம் – ஆண்டு, ஆப்திகம் – ஆண்டு சம்பந்தமானது)

மாசிகம் ;
மாசா மாசம் இறந்த நட்சத்திரத்தில் செய்யப்படும் சிராத்தம்;

திவஷம்:
முதலாண்டுக்குப் பின் தொடர்ந்துவரும் ஆண்டுத் திதிகளில், இறந்தமாசம், திதிகளில் செய்யப்படும் சிராத்தம்.

# சைவக் கிரியை விளக்கம்

# அபரக் கிரியையியல்

சைவப் பெரியார்
சு. சிவபாதசுந்தரம் பி. ஏ.

## அபரக் கிரியையின் நோக்கம்

அபரக் கிரியையாவது ஒருவர் இறந்த பின் அவருடைய நன்மைக்காக அவருடைய பிள்ளைகள் முதலியோரால் செய்யப்படுங் கிரியை. அபரம் = பிந்தியது.

புதல்வர் முதலானோர் இறந்தவர்களுக்குச் செய்யும் கிரியைகள் அவர்களுக்கு நன்மையாகின்றன. இவர்கள் செய்தற்குக் காரணமாயிருப்பது இறந்தோர் செய்த நல்வினையே. ஆதலால் புதல்வர் செய்யும் அபரக் கிரியை இறந்தோர் செய்த நல்வினையின் பலனைச் சேர்த்தற்குள்ள வழியே.

அபரக் கிரியையில் அந்தியேஷ்டி, அத்தி சஞ்சயநம், பாஷாண பூசை, சிராத்தம் எனப் பல பகுதிகள் உண்டு.

## மரணக் கிரியை

மரணக் கிரியையிலே மூன்று பகுதிகள் உண்டு. அவையாவன பேரிகை யடித்தல், சரீரசுத்தி, ஆன்மசுத்தி என்பனவாம். சரீரத்தைச் சுத்தி செய்வன அபிஷேகமும் சிவாக்கினியாற் சுடுதலுமாம். ஆன்ம சுத்திக்காக அந்தியேட்டி செய்யப்படும். இதனாலே சமய அநுட்டானத்திலே நேர்ந்த குறைகள் தீரும். (அந்தியேட்டி = அந்திய + இட்டி = கடைசியான யாகம்)

சரீரத்தைச் சலத்தாற் சுத்தி செய்து அலங்காரஞ் செய்க. வீட்டு வாயிலிற் பந்தலிட்டு பந்தலின் நடுவே மெழுகிய இடத்தில் அரிசி பரப்பி அதில் உரலும் உலக்கையும் வைத்துச் சீலை சாத்தி உரலில் மஞ்சட்பொடி இட்டு உரலைச் சுற்றி நாலு மூலைகளிலும் நல்லெண்ணெய், அறுகு, அட்சதை, வெற்றிலை முதலியவைகளை வைக்க. அதற்குக் கிழக்கே பேரிகையை வைக்க.

### பேரிகையடித்தல்:

ஆசாரியர் புண்ணியாகஞ் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி, ஆசமன சகளீகரணஞ் செய்து பேரிகையிலே பிரமா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்துப் பேரிகையடிப்பர்.

### அபிஷேகம்:

உருத்திர மூர்த்தியைக் கும்பத்திற் பூசிக்க. உரலையும் உலக்கையையும் பூசித்து எண்பத்தொரு பதங்களையுந் தியானித்து மஞ்சட் பொடியை இடிக்க. கும்ப தீர்த்தத்தாற் பிரேதத்திற்கு அபிஷேகஞ் செய்து எண்ணெய், மஞ்சள் மா, கௌபீனம் முதலியவற்றைச் சாத்துக.

### சுடலை சேர்தல்

பிரேதத்தைப் பாடையில் வைத்து ஒத்த சாதியாராய்த் தீட்சை பெற்றவர் பூணூலை இடமாகத் தரித்து அஸ்திர மந்திரஞ் சொல்லிக்கொண்டு தோளில் வைத்துப் போகவேண்டும். போம் வழியிலே அஸ்திர மந்திரத்தோடு பொரி தூவுக. வாத்தியங்களோடு சுடலைக்குக் கொண்டு போய்ப் பிரேதத்தின் தலை தெற்கே இருக்கும்படியாக வைக்க வேண்டும். சுடலையிற் பந்தலிட்டு முறைப்படி மண்டபம் அமைக்க வேண்டும்.

## சுடலைக் கிரியை

### மண்டபவமைப்பு:

சதுரமான இடமெடுத்து அதை ஒன்பது கூறாக்கி நடுவில் அக்கினி குண்டமும் வடமேற்கில் சிவகும்ப வேதிகையும் வடகிழக்கில் வர்த்தனி கும்ப வேதிகையும் தென்மேற்கிற் பஞ்சகவ்வியத்துக்கிடமும் ஒரு முழச் சதுரத்திலிடுக. தென்கிழக்கிலே சவஞ் சுடுவதற்காக நாலுமுழ நீளம் இரண்டு முழ அகலமான இடமெடுத்துக் கோமயத்தாற் சுத்தி செய்க. இந்த இடத்திற்குச் சிதாத்தானம் என்று பெயர்

### ஆசாரியரது கிரியை:

ஆசாரியர் ஸ்நானம் முடித்துச் சகளீகரணஞ் செய்து சாமான்ய அர்க்கியத்தோடு மேற்கு வாயிலால் உள்ளே போய்

சிவகும்பத்துக்கு முன்னே சென்று சகளீ கரணம், பூதசுத்தி, அந்தர் யாகம் முதலின செய்து சமான்யார்க்கியத்தில் மந்திரத்தைப் பதித்துச் சிவகஸ்தஞ் செய்து ஞானவாளை இடுப்பிற் கட்டிக் கொண்டு பஞ்சகவ்வியஞ் செய்து யாகசாலையைச் சுத்திகரிப்பர்.

## சுடுமிடத்திலே பூசை:

கடுமிடத்தை இருபத்தைந்து கூறுக்கி நடுக்கூற்றிலும் பக்கத்திலுள்ள நாலு கூற்றிலும் மஞ்சள் மா இட்டுப் பிருதுவி தத்துவத்தையும் பிரமாவையும் பூசித்து, தென்மேற்கு மூலையில் நான்கு கூற்றில் வெள்ளை மா இட்டு அப்பு தத்துவத்தையும் விஷ்ணுவையும் பூசித்து, இப்படியே தென் கிழக்கிலும், வடமேற்கிலும், வடகிழக்கிலும் முறையே சிவந்தமா (செங்கற் பொடி), கரி, பச்சை மாக்களை (இலைகளை இடித்து) இட்டு அக்கினியையும், உருத்திரனையும் வாயுவையும், மகேசுவரனையும், ஆகாசத்தையும், சதாசிவனையும் பூசிக்க. மிஞ்சிய நாலு இடங்களுட் கிழக்கில் மஞ்சள் மா இட்டு இந்திரனையும், தெற்கில் கறுப்பு மா இட்டு யமனையும், மேற்கில் வெள்ளை மா இட்டு வருணனையும், வடக்கிற் சிவப்பு மா இட்டுக் குபேரனையும் பூசிக்க.

## யாகேசுவரி பூசை:

வர்த்தனி கும்பத்திற் பாசுபதாஸ்திரத்தை முறைப்படி பூசித்து ஞானவாளை ஒப்புக் கொடுத்து யாகத்தை இரட்சிக்கும் படி வேண்டிக் கொள்க.

## லோக பாலர் பூசை:

பத்துத் திசைகளிலும் பத்துக் கும்பங்களை வைத்து தசாயுதங்களைப் பூசித்து சிவ உத்தரவின்படி யாகத்தைக் காக்குமாறு வேண்டிக் கொள்க.

## கும்ப அக்கினி பூசை:

வடமேற்கு மூலையிலே கும்பம் வைத்து முறைப்படி சிவபூசை செய்க. நடுவில் அக்கினி குண்டத்தில் சிவாக்கினியை யுண்டாக்கி அதிலே சிவபெருமானைப் பூசித்து பூரணகுதி செய்க.

## விறகு அடுக்குதல்:

சிதாஸ்தானத்தின் நடுவில் சதுரமாக மஞ்சட் பொடியிட்டபின் நடுவே குங்குமத்தால் முக்கோணமிட்டு இந்திரனையும் அக்கினியையும் பூசித்து அதில் விறகுகளை அடுக்கி, சிதையைச் சீலையாற் சுற்றி தர்ப்பை, பூ, எள்ளு ஆகிய இவற்றால் பூசை செய்க.

## பிரேத சுத்தி

பிரேதத்தைப் பஞ்ச கவ்வியத்தினாலும் கோமயத்தினாலும் விசேஷ அர்க்கியத்தினாலும் தெளித்துத் திருநீறு சாத்தி நல்ல சீலை யுடுத்துப் பூணூலிட்டுக் குண்டத்துக்குத் தெற்கே பிரணவாசனமான தர்ப்பையில் வைக்க.

## அந்தியேட்டி:

நிரீக்ஷணம் முதலான சுத்திசெய்து பிரேதத்தின் இருதயத்தில் ஆசன பூசைசெய்து ஆன்மாவை அதில் அழைக்க. பின்னர் அதற்காக மூன்று ஆகுதி செய்து பிரேதத்திற் பஞ்சப் பிரம மந்திரங்களைப் பதித்து அதன் இருதயத்திற் சிவனை ஆவாகனஞ் செய்து அந்த ஆத்மா அதில் நிலைத்தற்காக நூறு ஆகுதி செய்க.

ஆசாரியர் பிரேதத்துக்குந் தனக்கும் நாடி சந்தானஞ் செய்து நித்தியானுஷ்டான குற்றந் தீருவதற்காக மூலத்தால் நூறு ஆகுதி செய்க. அவர் சரீரத்திற் பிரவேசித்து ஆத்மாவைத் தம்மோடு சேர்த்துப் பின்னர் வெளியே வந்து அதைத் தம்முடைய இருதயத்திற்குக் கொண்டுபோய்த் தம்மோடு ஐக்கியப்படுத்தி உருத்திரனைத் தியானித்துக்கொண்டு அதை வெளியே கொண்டுவந்து பூரணகுதியோடு அக்கினியிற் சேர்த்து உருத்திரமூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

## சுடுதல்:

பிரேதத்தைத் தெற்கே தலையாகச் சிதையில் வைத்து வஸ்திரத்தால் மூடிவிடுக. கிரியை செய்வோன் ஸ்தானஞ் செய்து சிவ கும்பத்தைத் தலையில் வைத்துக் கும்பத்தில் துவாரஞ் செய்து சிதையை மூன்று தரஞ் சுற்றித் தலைப் பக்கத்தில் வடக்கு முகமாக நின்று கும்பத்தின் மேற் பாதியை எடுத்துவிட்டு மிஞ்சிய நீரில் பொன், அரிசி போட்டுத் தற்புருஷ மந்திரத்தால் நீரையும் அரிசியையும் பிரேதத்தின் வாயிலிடக் கடவன்.

ஆசாரியார் குண்டாக்கினியை வரியப் பண்ணி அதை எடுத்துச் சிஷ்ய சரீரத்தின் தலையில் வைத்துச் சிருக்கில் நெய், தேன், பால்களை விட்டுப் பின்னே சொல்லும் மந்திரங்களைச் சொல்லிப் பூர்ணாகுதி செய்க. மந்திரத்தின் கருத்து, 'அக்கினி தேவனே! மந்திரத்தாற் பரிசுத்தமாயிருக்கிற பிரதேசத்தின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக்கொள்ளும்' என்பதே.

பின்பு வர்த்தனிகும்பத்தை இடது தோளில் வைத்து நீரைக் கரகத்தின் மூக்கினால் தாரையாக விட்டு மும்முறை சுற்றி அதைக் கவிழ்த்து விட்டுக் கர்த்தா சிவாக்கினியை வைத்துத் திரும்பிப் பாராமல் நீர்க்கரைக்குப் போய் ஸ்நானஞ் செய்து கரையில் பிதுர்த் தர்ப்பணஞ் செய்து அகோர மந்திரஞ் செபித்துப் பிரேதத்தை யுத்தேசித்துச் சவனைப் பூசிக்க.

## அஸ்திசஞ்சயனம்

அஸ்திசஞ்சயனம்: எலும்பைச் சேர்த்தல் என்று பொருள்படும். முதலைந்து நாள்களிலொன்றிலேனும் ஏழாம் ஒன்பதாம் நாள்களிலேனும் இது செய்யத் தக்கது.

நெருப்புத் தணிந்து போனால் சிதைக்குக் கிட்டச் சிவாக்கினி உண்டாக்க வேண்டும். பிராயச்சித்தத்துக்காக அஸ்திரமந்திரத்தால் நூறாகுதி செய்து பிருதுவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் பூசித்து, ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று ஆகுதி செய்க.

ஒரு பாத்திரத்திலே பாலை விட்டு அதை ஒரு முக்காலியில் வைத்துவிட்டுக் கால், கொப்பூழ், நெஞ்சு, முகம், தலையாகிய பகுதிகளிலுள்ள எலும்பை அவ்வவ்விடத்துக்குரிய மந்திரத்தாலெடுத்து அந்தப் பாத்திரத்தில் வைக்க. பின்பு அதைத் தீர்த்தத்திலிடுக; சாம்பலை ஆழ்ந்த நீரிலிடுக.

## பாஷாண பூசை

பாஷாண பூசையாவது இறந்த ஆன்மாவை ஒரு கல்லிலே பூசை செய்தல். இந்தப் பூசையினாலும் இதனோடு செய்யப்படும் மற்றும் கிரியைகளினாலும் ஆன்மாவானது சிவபதவியை அடையத் தக்கதாகின்றது. பூசையினாலே அதற்குத் திருப்தியும் மந்திரங்களால் அதிலுள்ள குற்ற நீக்கமுமுண்டாகும்.

கிரியை செய்வோன் சவரஞ் செய்வித்து ஸ்நானம் முதலியவற்றை முடித்து ஒரு மண்டபம் அமைத்துச் சங்கற்பம், விநாயக பூசை, புண்ணியாகம் முடித்து நடுவில் ஒரு மேடையிலே கும்பம் வைத்து உருத்திர மூர்த்தியைப் பூசிக்க. அதற்கு முன்னே பன்னிரண்டு அங்குல நீளம் ஆறங்குல அகலமுள்ள சுத்தமான செங்கல்லை வைத்து அதில் மனிதவடிவமெழுதி இறந்த ஆன்மாவை ஆவாகித்துச் சகல உபசாரமுஞ் செய்க. பின்பு அபிஷேகஞ் செய்து சீலை அணிந்து பூசை தர்ப்பணஞ் செய்து பிண்டமிடுக.

தர்ப்பணமுந் தானமும்: தர்ப்பணம் திருப்திக்காகச் செய்யப்படுவது. இது இரு வகைப்படும். வாசோதகமானது சீலையிலே தண்ணீரை விட்டுக் கொடுக்கப்படுவது. இது ஒவ்வொரு நாளும் மூன்று முறை கொடுக்கப்படும். திலோதகம் எள்ளோடு கொடுக்கப்படும் தண்ணீர். (திலம் = எள்ளு, உதகம் = தண்ணீர், வாசம் = சீலை) இது முதல்நாள் மூன்று முறையும் அடுத்த நாள்களில் ஒவ்வொன்று கூடவுங் கொடுக்கப்படும். பத்தாம் நாளிற் பன்னிரண்டு தர்ப்பணம் செய்யப்படும். ஒவ்வொரு தர்ப்பணமும் பலனடைதற்காக ஒவ்வொரு தானம் செய்யப்படும். இது ஏகோத்தர விருத்திதானமெனப்படும். (ஒவ்வொன்று பின் கூடுவது என்பது கருத்து.)

நவசிராத்தம் – இது முதல் நாள் தொடங்கி ஒற்றை நாள்களில் தகுதியுள்ள ஒருவருக்குத் தானமாகச் செய்யப்படுவது. இது ஆன்மாவை நற்கதி அடையப் பண்ணுவது. (நவம் = புதிய).

சங்கிதாசிராத்தம் – இது சங்கிதை மந்திரங்களுக்குச் செய்யப்படும் பூசை ஒவ்வொருநாளும் சங்கிதை மந்திரத்துள் நேத்திரமொழிந்த பத்தில் ஒவ்வொன்றாக ஒவ்வொரு அந்தணரைப் பாவித்துப் பூசித்து அவருக்குத் தானஞ் செய்க. இதனால் இறந்தவரது நித்திய கருமானுட்டான குற்றங்கள் தீரும். இது மந்திர வடிவம் உண்டாக்கப்படும் முறையுமாமென்பர்.

உருத்திரபலி – உருத்திரனைப் பூசித்து ஆன்மாவை உருத்திரனோடு சேர்த்தற்காக இது செய்யப்படுவது. ஒரு சுத்தமான இடத்தில் மண்டபம் அமைத்து நடுவிலே ஒரு கும்பமும் அதைச் சூழப் பதினொரு கும்பமும் வைத்து நடுவிலுள்ள கும்பத்திலே மஹாருத்திர மூர்த்தியையும் மற்றவைகளிற் பதினொரு ருத்திரர்களையும் பூசிக்க. வாழைப்பழம், சர்க்கரை, எள்ளு ஆகிய இவைகள் கலந்த அரிசி உருண்டைகளைப் பலியாக இடுக. பின்பு இறந்த ஆன்மாவுக்கும் பிதுர்களுக்கும் பலிகொடுக்க. கும்பத்தையும் குருவையும் சுற்றிக் கும்பிடுக.

பிரபூதபலி – கல்லிலே நிற்கும் ஆன்மாவுக்கு இன்பமுண்டாதற்காக "பிரபூதபலி" இடுக. அஃதாவது பெரிய அளவான சாதம் கறி, தயிர், நெய், பாயாசம் முதலியவைகளைப் படைத்து நைவேத்தியஞ்செய்தல் பின்பு தூப தீபம் காட்டிப் பூசை செய்க.

பாஷாணத்தில் நிற்கும் ஆன்மாவை ருத்திர கும்பத்தோடு சேர்த்துச் சிவலோகத்தையடையத் துணை செய்க. கல்லையுங் கும்பத்தையும் பலியையும் கடலில், அல்லது நதியில், அல்லது வேறு ஜலத்தில் விட்டு ஸ்நானம் செய்க.

## ஏகோதிட்டம்

ஆசௌசம் நீங்கிய நாளுக்கு அடுத்த நாளிலே ஏகோதிட்டம் செய்யத்தக்கது. இதன் நோக்கம் இறந்தவருடைய ஆன்மாவைச் சுத்தி செய்வதாம். கிரியைகளெல்லாம் இடப்பக்க முறையாகச் செய்யப்படும்.

முதல்நாள் தகுதியுடையவரான சிவதீக்ஷைபெற்ற ஒருவரைச் சிராத்தத்துக்கு வரும்படி உபசாரத்தோடு கேட்டுக்கொள்ள வேண்டும். அன்றிரவு சிவபெருமானை நினைத்துக்கொண்டு நித்திரை செய்ய வேண்டும். அடுத்தநாட் காலையில் நித்திய கருமங்களெல்லாம் முடித்துக் கொண்டு சிராத்தத்திற்கு வந்தவருக்குச் சகல உபசாரங்களுஞ் செய்து மேற்குமுகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருத்தி ஏகோதிட்டம் செய்யப்போகிறேனென்று அவரிடம் உத்தரவு பெற்று, அவருக்கு ஆசனமாக மடித்த தர்ப்பையைக் கொடுக்க.

இறந்தவருக்குப் பூசை: இறந்து போனவரை மந்திரத்தினால் அழைத்து ஆசாரியரிலே எழுந்தருளும் படி வேண்டிக் கொள்க. அவருக்குப் பூவைச் சாத்தித் தூப தீபங் கொடுத்துப் பூசை செய்து "திருப்தியுண்டாக" என்று சொல்லுக. பின் சாப்பாடுகளேனும், சாப்பாட்டுக்குரிய பொருள்களேனும் கொடுக்க. ஏழைகளுக்கும் போசனங் கொடுக்க வேண்டும்.

பிண்டமிடுதல்: போசனம் முடிந்த பின் உத்தரவு பெற்றுக்கொண்டு தெற்கு நுனியாகத் தர்ப்பையைப் பரப்பி அதில் எள்ளிட்டு எல்லாவகையான உணவுகளையுஞ் சேர்த்துப் பிண்டமாக்கி அவற்றை இறந்தவருடைய திருப்திக்காகவென்று சொல்லி வைத்துத் தெற்கு முகமாக இட முழந்தாளை ஊன்றி அப் பிண்டத்தில் அவரைப் பூசிக்க.

தானம் – பின்பு இயன்ற அளவு அதிகமாக அவருக்குத் தானங்கள் செய்க.

இது உருத்திரர்களுடைய வழிபாட்டுக்காகச் செய்யப்படுவது. சிராத்தத்துக்கு வந்தவரை அனுப்பிய பின் பிண்டத்தைத் தண்ணீருக்குள் விட்டு ஸ்நானஞ் செய்து சாப்பிடுக.

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் ஒரு ஆண்டு முடிவில் செய்யத்தக்கது. ஆயினும் அதற்கிடையில் நேரத்தக்க வசதியீனங்களை நினைத்து ஏகோதிட்ட நாளுக்கு அடுத்த நாளிலே செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு. (1) சிவனடியார்களாகிய நந்திதேவருக்கும் மகாகாளருக்கும், (2) பிதுர்த்தேவர்களாகிய கந்தர், சண்டர், கணேசருக்கும் (3) விருந்தாக வரும் அதிதி அப்பியாகதருக்கும் (4) இறந்தவராகிய ஆன்மாவுக்கும் பூசை செய்யப்படும். இறந்த ஆன்மாவுக்கு நிமித்தர் என்று பெயர். இந்த நாலு வகையாருடைய பூசையையும் ஏற்றுக்கொள்ள நால்வரேனும் இருவரேனும் வேண்டும். சபிண்டீகரணத்துக்கு வருபவர்களுக்குச் சகல உபசாரங்களுஞ் செய்து வீட்டினுள்ளே அழைத்துச் சென்று தர்ப்பையாசனத்திலேயிருத்துக. விசுவதேவர் அதிதி அப்பியாகதர் கிழக்கு முகமாகவும் பிதுர் தேவர்கள் வடக்கு முகமாகவும் நிமித்தர் மேற்குமுகமாகவும் இருப்பர்.

அவர்கள் முன் பாத்திரங்களை வைத்துத் தேவபாத்திரங்களில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளுமிட்டு ஏகோதிட்டத்திற் போற் பூசை செய்து சபிண்டீகரண சிராத்தம் செய்தற்கு உத்தரவு பெற்று வலது பூணூலோடு விசுவதேவரைப் பூசிக்க. பின் பூணூல் இடமாக இட்டுப் பிதுர்த் தேவர்களைப் பூசித்து நிமித்தன மூலமந்திரஞ் சேர்த்து இறந்தவருடைய தீட்சா நாமத்தோடு பூசித்து அதிதி அப்பியாகதர்களையும் பூசிக்க. சாதம் முதலியவற்றை நெய்யோடு சேர்த்து ஓமாக்கினியினாலே பிதிர்களுக்கும் நிமித்தருக்கும் ஆகுதி செய்க. பின் விசுவதேவர் முதலியோருக்குப் போசனங் கொடுக்க. சாப்பிடமாட்டாதவர்களாயின் அரிசி முதலியவைகளும் தட்சணையுங் கொடுத்தனுப்புக.

சபிண்டீகரணம் - பின்பு அவர்களது முன்னிலையில் சாணியால் மெழுகித் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிச் சாதங் கறிகளை எள்ளுடன் சேர்த்துப் பிதிர் வர்க்கத்திற்கு மூன்றும் மாதுரு வர்க்கத்திற்கு மூன்றும் நிமித்தருக்கு ஒன்றுமாக ஏழு பிண்டம் பிடித்து வைக்க. நிமித்த பிண்டத்தைப் பூசித்து மூன்று கண்டமாக்கி ஆணாகில் பிதுர் வர்க்கத்தில் ஒவ்வொன்றோடு சேர்க்க. பெண்ணாகில் மாதுருவர்க்கத்தோடு சேர்த்துப் பூசிக்க. இதனால் அந்த ஆன்மா பிதுர் தேவராகின்றது. பின்பு பிண்டத்தைத் தண்ணீரில் விடுக.

பிதுர் தேவர்களாகிய கந்த சண்ட கணாதீசர்கள் சிவலோகத்திலுள்ளவர்கள். இறந்தவர்களுக்குள்ளே முதல் தலைமுறையோர்க்குரிய பூசை கந்த தேவருக்கும், இரண்டாந் தலைமுறையோர்க்குரியது சண்ட தேவர்க்கும் மூன்றாந் தலைமுறையாரது கணாதீசருக்குஞ் செய்யப்படும். அப்பூசைகளின் பலன் இறந்தவருக்கு அவர்களால் சேர்க்கப்படும். இத்தலைமுறைகாரரர் அவ்வத் தேவர்களது சாரூபத்தைப் பெறத் தக்கவராதலாற் போலும் இவர்களைக் கந்தரூபர், சண்டரூபர், கருணாதீசரூபர் என்பர்.

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் எழுதிய 'சைவக் கிரியை விளக்கம்' என்னும் நூலிலிருந்து பெறப்பட்டது.)

உ

## அபரக்கிரியையின் போது (மரணவீட்டில்) ஓதப்படும்

# திருப்பொற்சுண்ணம்

ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண்அப்பற்கு
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம் பிரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணமிடித்து நாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள்அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தைநந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்தி
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளுவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினார்க்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்

# ஆன்மா — அதன் பூத உடல், இரண்டுக்கும் இனிய பணியாற்றியவர் இ. பொ. இராசையா அவர்கள்

பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்
இணுவில்

ஈழத்தில் அரசியல், இலக்கியம், சமயத் துறை அனைத்திலும் வாய்ச்சொல் வீரர்கள் மயமாகத் தமிழினம் கடந்த காலத்தில் வாழ்ந்த வேளையிலும், முகாந்திரம் இ. பொ. இராசையா ஜே. பி. அவர்கள் தமது செயல் வீரத்தின் முத்திரையைப் பலப்பல துறைகளில் பதித்துப் பணியாற்றி வந்துள்ளார்.

சைவநெறி தழைத்தோங்க ஏறக்குறைய நூறாண்டுகளுக்கு முன்பு நாவலர் பெருமான் நன்மாணாக்கர்களால் நிறுவப்பட்டது யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை. அச்சபையில் நீண்டகாலம் தனாதிகாரியாகப் பணியாற்றிச் சபையின் பெயரில் இலங்கையிலும், இந்தியாவில் சிதம்பரத்திலும் இருக்குஞ் சிவ சொத்துக்களைப் பறிபோகவிடாது காத்துச் சைவப்பணி பலவற்றுக்கு உயிர்நாடியாக இருந்தார்.

யாழ் மாவட்ட சனசமூக சமாசங்களிலும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்திலும் பொறுப்புவாய்ந்த பதவிகளிலமர்ந்து அவர் ஆற்றிவரும் சமூகப் பணிகள் யாழ் குடாநாடு மட்டுமன்றி இலங்கையே அறிந்தவையாகும்.

மேலும் சிறந்த ஆயுர்வேத வைத்தியராகவும் விளங்கும் இவர் நண்பர், அயலவர், உறவினர் பலரின் ஆரோக்கியக் கட்டமைப்புக்குக் காரணராக வைத்தியப் பணியாற்றி வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் இன்று முதன்மை பெற்றுப் பலப்பல ஊர் மக்களதும், அரசியற் தலைவர்களதும் ஈமக்கிரியைகள் நிகழ்ந்த மயானமாக விளங்கும் யாழ் கோம்பையன்மணல் மயான பரிபாலன சபையின் தலைவராகவும், பணியாற்றி, பாலைவனமாக இருந்த — கல்லும் முள்ளும் கள்ளியும் பற்றையும் மயமாக இருந்த அம்மயானத்தை இன்று சோலைவனமாக்கியுள்ளதில் இவர் பங்கு மகத்தானது.

மயானத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து நெடுந்தூரம் பிரேத ஊர்வலத்தில் நடந்து இளைத்துக் களைத்து வரும் மக்கள் களைப்பாறி உற்சாகம் பெற வைக்கும் இன்னிழற் குளிர்ச்சியும் தனி மணற் பரப்பும் பெற்றுக் கோம்பையன் மணல் மயானம் பொலிகின்ற இந்த எழிலுக்கு இ. பொ. இராசையா அவர்களே காலாஞர் என்பது மிகையாகாது.

வாழ்க அவர் பொதுப்பணிகள், வாழி அவர் பல்லாண்டு.

உ

சிவமயம்

## நன்றி

1935-ம் ஆண்டளவில் வைத்தியர் திரு. த. இராமலிங்கம் அவர்களது பெரும் பிரயத்தனத்தினுல் பணம் சேகரித்து மயான வண்டில் ஒன்று அழகாகத் தயாரிக்கப்பட்டது.

அவ் வண்டில் பழுதடைந்ததைக் கவனித்து 'மில்க்வைற்' தொழிலதிபர் திரு. க. கனகராஜா J. P. அவர்கள் அதற்கு 1000 ரூபாவுக்கு மேற் செலவிட்டு அவ்வண்டியைத் திருத்தி புதுப்பாகங்கள் இணைத்து நன்னிலைக்குக் கொண்டுவந்துள்ளார். அதற்கு யாழ். வண்ணை. கோம்பையன் மணல் மயான பரிபாலன சபையும், யாழ். பொதுமக்களும் இவர்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இ. பொ. இராசையா,<br>
தலைவர்,<br>
வண்ணை கோம்பையன்மணல் மயான பரிபாலன சபை,<br>
யாழ்ப்பாணம்.

1-1-1987.

## Mantra and its Significance

God is omnipotent, omnipresent and omniscient, and upon Him depends the existence of mind and matter; of subject and object. There is one Supreme Deity presiding over everything. He does so with a gradation of His powers with the various other gods and goddesses who perform the functions delegated to them deriving their authority from the Supreme God - head.

The Vedic seers speak of the Supernal Ether - Paramam Vyoma - as the abode of Vak, and as the house of the Supreme Immortal Light. From this mass of infinite Supernal Light which has no form emerge during the course of Manifestation the rays that fashion the objects of the world as well as the gods of the Cosmos. These lines of light build the form pattern of the gods which are known as yantras or chakras.

The Vedic rishis invoked the gods posted at various planes. According to them, all the gods reside in the Supernal Ether - Paramam Vyoma; This Ether of the Sublime is the native home of the Primordial Sound - Substance of which the mantras are formations hidden in the higher planes and manifest in their descent to the last step which is human speech.

The seer with the faculty of inspirational audience hears the mantra as a particular vibration of the Original Throp representing the Sound - Body of the particular god. He, also, with the faculty of revelatory vision sees the yantra or chakra as a particular emergence of the Original Light representing the Form - Pattern of the same god. The mantra is the sound body of the deity while the yantra is the form - pattern.

A mantra is an ever living embodiment of the Truth and Power which have found expression in it through the medium of the rishi or yogin to whom it was given to discover and reveal the sound - body. When a mantra is uttered under proper conditions it is the manifestation of the fire of tapasya and realisation that lies coiled up in the body of that utterance. The vibrations issuing from the mantra are its own and they create the necessary conditions in and around the reciter appropriate to the reception of the response from the deity to whom the address is made. Repeating the vedas and other mantras by which the Sattva material in the body is putified is called study - Svadhyaya. There are three grades of repetitions of mantras. One is called the 'verbal', another 'semi - verbal' and the third 'mental'. The verbal or audible is the lowest in effectiveness and the mental or inaudible is the highest. The repetition in which the sound of the mantra can be heard is the verbal: the next one is where only the lips move but no sound is heard. The inaudible repetition of the mantra accompanied with the thinking of its meaning is called the mental repetition and is the highest. The method of inaudible repetition of the mantra is used in meditation. The mantra must have a certain sound, a certain vibrational pattern so that when it is chanted internally, it will elevate the individual's own vibration or initiative rhythm. Each

entity of this creation has its own particular initiative rhythm, its own note in the universal harmony.

In outer worship, the Divine Presence is sought in an Image or in the chakra – the form – pattern of the deity. When properly installed an image becomes a living Presence to the worshipper. The sadhaka should lead a life of absolute sincerity. He should reject totally from his being all hypocrisy, cunning and deceit. The sadhaka has to seek a Guru and has to be initiated through him.


The mantra should actually rise from the depth of one's heart and be accompanied by the four processes of call, surrender, prayer and waiting upon the deity. The moment a mantra is uttered there is a pulsation in the central nervous system and through the eferent and afferent nerves the message is taken to the brain where it strikes and comes back in a cycle. Though the recitation may superficially appear monotonous, yet it is that very condition which causes the relaxation of the central nervous system, thereby leading to a relaxed awareness without any objective hearing of the repetition – a condition known in medical terminology as Alpha wave electrical activity. This Alpha wave electrical activity takes place as a natural process during deep sleep when a re-vitalisation of the entire central nervous system occurs and neural stamina is restored. But now on the face of the confirmation by science that this religious practice – Mantra Yoga produces the same effect as deep sleep, it is imperative that we should resort to it with redoubled vigour for our own physical welfare as well as spiritual promotion. When this is practised for 20 minutes daily, changes take place automatically-physiologically in the nervous system, in the heart, and in the cerebral system. The repetition of mantras should be done regularly with faith, reverence and piety. Emphasis is laid on the various Mula Mantras of the deities worshipped.

When the Universe is destroyed at the end of a cycle molecular action never ceases. All the massive vibrations disappear; the sun, moon, stars and earth melt down; but the vibrations remain in the atoms. Each atom performs the same function as the big worlds do. So even, when the vibrations of the Chitta subside, its molecular vibrations go on, and when they get the impulse come out again. Repetition of mantras is the greatest stimulus that can be given to the spiritual samskaras. Moments of company with the holy greatly help the ship of self to cross the ocean of life. Association with the holy has great power. The repetition of a mantra and thinking of its meaning is equivalent to keeping holy company in your mind. Eventually Light will come to you – the Self will shine forth. So let us put our hearts into the japa of the mantra and surrender our entire being to the enveloping consciousness.

Culled by:
C. Ramanathan
Retired Preventive Officer – Customs.

# செந்தில் ஆண்டவன்

நகைவியாபாரம் — அடைவு நிலையம்
85, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.



நகைகள்

குறித்த நேரத்தில்

உத்தரவாதத்துடன்

செய்து கொடுக்கப்படும்.

# "சங்கு மார்க்"

எவர்சில்வர்ப் பாத்திரங்களை

தொழிற்சாலை விலையிலிருந்து 5 % தொடக்கம் 15 % வரையிலான விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள

தவறாது நாடுங்கள்.

## செல்லாசன்ஸ் சேல்ஸ் சென்ரர்

118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 22054.

போன் : 22170 Phone : 22170

# கோபால் ஜுவெல்லர்ஸ்

துரையப்பாப்பத்தர் கோபாலசாமி

தங்க வைர நகை வியாபாரம்

82/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கும்

வைரங்களுக்கும் சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

# GOPAL JEWELLERS

Duraiappah Pathar Gopalasamy

Jeweller & Gem Merchant.

82/5, Kasturiar Road, — JAFFNA.

தொலைபேசி: 021-22362

# கே. கே. வி.

# யாழ்ப்பாணம் நகைமாளிகை

தங்க வைர நகை வியாபாரம்

82/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தங்கப் பவுண் வைர நகைகள்

எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்தமுறையில் செய்து கொடுக்கப்படும்.

# K. K. V. Jaffna Jewel House

82/4, Kasturiar Road — JAFFNA

நாகரீக நங்கையர் விரும்பும் நவீன டிசைன்களில்
கால் சங்கிலிகள், பொற்றொழிலாளருக்குத் தேவையான
நகை செய்யும் ஆயுதங்கள்,
உங்களுக்குத் தேவையான அழகிய மனங்கவர்
தங்க நகைகள் எது வேண்டுமானாலும்
இன்றே விஜயம் செய்யுங்கள்

## நியூ புஸ்பா ஜுவலர்

284, (106) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## PARIS MART-S

No. 155, Power House Road
JAFFNA

நங்கையர் விரும்பும் நவநாகரீக பட்டுப் பிடவைகள்,
உள்நாட்டு, வெளிநாட்டு ஜவுளிகள், கண்கவர் சேட்டிங் சூட்டிங்
எது வேண்டுமானாலும் இன்றே விஜயஞ் செய்யுங்கள்

## பரிஸ் மாட்ஸ்

(பஸ்நிலையம் முன்பாக)
இல. 155, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள்தேவை எதுவாகுனும் இன்றே விஜயஞ் செய்யுங்கள்

## ☆ ஸ்ரீ இராம கிருஷ்ணு ☆

இல. 9, நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

● சாய்ப்புச் சாமான் ● இனிப்பு ● பிஸ்கட் ● பால்மா
மற்றும் வீட்டுப் பாவனைக்குத் தேவையான எப்பொருட்களாகுனும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்தில் சிறந்த ருசிமிக்க
சிற்றுண்டி வகைகளுக்கும், சைவ உணவிற்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்

## ஸ்ரீ தாமோதர விலாஸ்

239, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்,

ஓடர்கள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

## கணக்கறிக்கை

| | |
|---|---|
| நிரந்தர வைப்பு<br>(மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்) | 26000 00 |
| நடைமுறைக் கணக்கு<br>(மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)<br>இல: 1706 | 1014 40 |
| கை இருப்பு | 3557 00 |

இங்ஙனம்
க. ந. கங்கைவேணியன்
கௌரவ பொருளாளர்
கோம்பையன்மணல் மயான பரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

28 - 2 - 87

INAM LIBRARY JAFFNA
693

# எமது நன்றி

卐 எமது பொன்விழா மலர் சிறப்புறுவதற்கு வாழ்த்துரைகள், கட்டுரைகள் வழங்கிய அறிஞர்களுக்கும்

卐 மலரை அலங்கரிப்பதற்கு விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகச் செல்வர்களுக்கும்,

卐 இம்மலர் சிறப்பாக அமைவதற்கு அயராது உழைத்த மயிலங்கூடலூர் திரு. P. நடராஜன் அவர்களுக்கும்,

卐 இம்மலருக்கு விளம்பரங்களைச் சேகரித்துதவிய திரு. இ. தவகோபால் (நிர்வாகப் பணிப்பாளர், யாழ்மாவட்ட இந்து இளைஞர் பேரவை) அவர்களுக்கும், திரு. தளையசிங்கம் (கிராமசேவையாளர் வண் - தென் கிழக்கு) அவர்களுக்கும்.

卐 இம்மலரை அச்சிட்டுதவிய யாழ்ப்பாணம் சைவப்பிரகாச அச்சகத்தாருக்கும் எமது உளங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

இ. செ. மன்மதராஜன்
கௌரவ செயலாளர்
கோம்பயன் மணல் மயான பரிபாலன சபை
யாழ்ப்பாணம்.

10-02-87

---

அச்சுப்பதிவு:
சைவப்பிரகாச அச்சகம், யாழ்ப்பாணம்.

அச்சு வேலைகள் எதுவானாலும்

# தமிழ், சிங்களம், ஆங்கிலம்

ஆகிய மும் மொழிகளிலும்

அழகாகச் செய்விப்பதற்கு

நாடவேண்டிய இடம் :

V

# சாந்தி அச்சகம்

575, கே. கே. எஸ். ரோட்

( நாச்சிமார்கோவிலடி ) யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23002

# PARIS TEX-S

Jaffna Branch: POWER HOUSE ROAD JAFFNA

T. Phone: 23863

சிறந்த ரகம்! நிதான விலை!

## எழில்மிகு பட்டு புடவைகள்

## ஜவுளி ரகங்கள்

கண் கவர் சேட்டிங், சூட்டிங், கவுண்,
T - சேட்கள், மக்ஸி,

மற்றும் கவர்ச்சி மிக்க

றெடிமேட் ஆடைகளை

சகாய விலையில் பெற்றுக்கொள்ள

சிறந்த ஸ்தாபனம்

# பரீஸ் ரெக்ஸ்

யாழ். கிளை : 153, மின்சார நிலைய வீதி,
[ பஸ்நிலையம் முன்பாக ] யாழ்நகர்.

Head Office; PARIS TEX-S 130, Maliban Street, Colombo-11 T. P. 548709